# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை


சுடர் – 54
விலை ரூபாய் 20.00

தீபம்–54 | மார்கழி, தை இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 29? டொக்கியாட் வீதி, திருகோணமலை.
E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக (லூக் 2:13)



**டிசெம்பர் 09**
பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை

**டிசெம்பர் 17**
திருத்தந்தை பிரான்சிஸ்

**டிசெம்பர் 25**
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

**இவர்களது பணிவாழ்வு சிறக்க செபிப்போம் வாழ்த்துவோம்**

Happy Birthday

திருமலை மறைமாவட்ட குருக்கள்,
துறவியர், பொதுநிலையினர்

## அகில இலங்கை கிறிஸ்மஸ் கரோல் போட்டியில் முதலாவது இடம்



கிறிஸ்தவ அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை கிறிஸ்மஸ் கரோல் போட்டியில் 18 குழுக்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது "புனித மரியாள் பேராலய பாடகர் குழுவினர்".

இப் போட்டிக்கான பாடல்கள் தாமாகவே இயற்றி இசையமைத்தவையாக இருக்க வேண்டும் என்பதே அமைச்சின் விதி. இதற்கமைய இப்பாடல்களை பங்குத்தந்தை அருட்பணி. போல் ரொபின்சன் அவர்களே இயற்றி இசையமைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : புனித மரியாள் பேராலயம்**

## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

**இடம்** : பேராலயம்

**காலம்** : 12. 01. 2019 (சனிக்கிழமை)

**நேரம்** : மதியம் 12 மணி முதல் இரவு 12 மணி வரை



**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

## மறையாசிரியர் ஒளிவிழா - 2018



திருகோணமலை மறைமாவட்டத்தில் மறையாசிரியர்களுக்கான ஒளிவிழா 15. 12. 2018 அன்று திருமறைக்கல்வி நடுநிலையத்தில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வுக்கு மறைமாநில ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மறையாசிரியர்களையும் அவர்களது பணிகளையும் வாழ்த்தினார்.

அத்துடன் கடந்த காலங்களில் இயக்குனராக பணியாற்றிய அருட்பணியாளர் N. C. அருள்வரதன் அவர்களுக்கும், சகோதர மொழிப் பொறுப்பாளர் அருட்பணியாளர் S. R. ஜெயரெட்ணம் அவர்களுக்கும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நடைபெற்றது. அருட்பணியாளர். A. A. நவரெட்ணம் அவர்களால் "அன்பின் மகிழ்ச்சி", "திருஅவையின் சமூகப் படிப்பினைகள்" எனும் நூல் அறிமுக விழாவும் இடம்பெற்றது. லொயலா கல்வி நிறுவன மாணவர்களால் "வலி" எனும் தலைப்பில் நாடகமும் மேடையேற்றப்பட்டது.

இவ் ஒளிவிழா நிகழ்வுக்கு கணிசமான மறையாசிரியர்களும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

**திருமறைக்கல்வி நடுநிலையம்**
**திருகோணமலை**

வாசகர்கள்
அன்பர்கள் வாடிக்கையாளர்கள்
எழுத்தாளர்கள் அனைவருக்கும்
திருமலைத்தீபத்தின்
இனிய நத்தார் புதுவருட
நல்வாழ்த்துக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**ஆண்டவரே நீர் ஒளி மிக்கவர். (தி. பா 76 :4)**



இறைபக்தியிலும் தூய திருத்தூது
ஆட்சிபீடத்தின் தயவினாலும்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆகிய நாம்
நம் மறைமாவட்டத்திலுள்ள
சகல அருட்பணியாளர்கள்,
துறவற சபை சகோதர, சகோதரிகள்,
பொதுநிலை விசுவாசிகள் அனைவருக்கும்
இறைவனின் அருளும் ஆசீரும் வேண்டி எழுதும்
2019-ம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி சுற்றுமடல்

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நமதாண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களையும், மலர்ந்துள்ள புத்தாண்டு வாழ்த்துக்களையும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மலர்ந்திருக்கும் புதிய ஆண்டு உங்கள் அனைவரதும் வாழ்வில் புதிய விடியலையும் மகிழ்ச்சியையும், அமைதியையும் கொண்டுவர வாழ்த்துகின்றேன். இப் புதிய ஆண்டில் நம்பிக்கையோடும், புதிய உத்வேகத்தோடும், அர்ப்பணிப்போடும் செயல்பட அழைப்பு விடுக்கின்றோம்.

எமது கிறிஸ்தவத் திருப்பயணத்தில் இறைவன் எமக்கு பல ஆசீர்வாதங்களையும் வாய்ப்புக்களையும் தந்து வழிநடத்துகிறார். பல்வேறுபட்ட நிலைகளில் இருக்கும் எம்மை அவர் தம்பணிக்கென அழைக்கின்றார். அன்னை மரியாவைப் போல நாமும் "ஆம்" என்று பதில் கூறி அர்ப்பணிப்போடு செயல்படுவோம். திரு அவையால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் எமது ஆதரவை வழங்கி இறைபுகழ் ஓங்கச் செய்வோம்.

எமது மேய்ப்புப்பணியின் நோக்காகிய ஆன்மீகம், கல்வி, சமூகப் பணியை இலக்காகக் கொண்டு 2017ம் ஆண்டு தொடங்கிய ஐந்தாண்டுத் திட்டத்தில் 2018ம் ஆண்டு நாம் மூன்று தலைப்புக்களை முன்வைத்திருந்தோம். இவற்றை மையமாகக் கொண்டு பங்குகள், பாடசாலைகள், நிறுவனங்கள், துறவற சபைகள் மட்டத்தில் பல திட்டங்களை வகுத்து செயல்படுத்திய குருக்கள், துறவற சபை சகோதர சகோதரிகள், பொது நிலை விசுவாசிகள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒவ்வொருவரும் முன்வைக்கப்பட்ட தலைப்புக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அர்ப்பணிப்போடு செயல்பட்டிருந்தீர்கள்.

கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடம் 2019 ஆண்டும் நாம் எமது ஆன்மீக, சமூக வளர்ச்சிக்காக மூன்று கருப்பொருள்களை (தலைப்புக்களை) முன்வைத்துள்ளோம்.

## 1. விவிலிய வாசிப்பு ஆண்டு
## 2. லூக்கா நற்செய்தி ஆண்டு
## 3. சமூக விழிப்புணர்வு ஆண்டு

### 1. விவிலிய வாசிப்பு ஆண்டு

நாம் நாளாந்தம் முறையாக விவிலியம் வாசிப்பதைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுமெனும் நோக்கோடு இத்தலைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் நாளாந்தம் விவிலியம் வாசிக்கிறோம் அல்லது வாசிக்கக் கேட்கிறோம். ஆனால் ஒழுங்கு ரீதியாக பழைய, புதிய ஏற்பாட்டுப் பகுதிகளை வாசிப்பதில்லை. எனவே விவிலியத்தை தொடக்கம் முதல் முடிவுவரை அனைவரும் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கும் நோக்குடன் விவிலிய வாசிப்பு ஆண்டாக நாம் அறிவித்துள்ளோம். நாளாந்தம் வாசிப்பதற்கான அட்டவணை பங்குத்தந்தையர் மூலம் அனைத்து குடும்பங்களுக்கும், கத்தோலிக்க நிறுவனங்களுக்கும், துறவற இல்லங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள்**

1. நாளாந்தம் விவிலிய வாசிப்பை அனைவரிடத்திலும் ஊக்கப்படுத்துதல்.
2. விவிலிய வாசிப்பு அட்டவணை அனைவரது கரங்களிலும் கிடைப்பதை உறுதி செய்தல்.
3. ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அதிகாரத்தை வாழ்வாக்க முயற்சித்தல்.
4. தேவையான திருவிவிலிய நூல்களை பெற்றுக்கொள்ள உதவுதல்.
5. இல்லங்களிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும், துறவற இல்லங்களிலும் நாளாந்த விவிலிய வாசிப்பை உறுதிப்படுத்துதல்.
6. இல்லங்களில் விவிலிய அரங்கேற்றம் செய்வதனையும், ஆலயங்களில் விவிலியப் பாவனையையும் ஊக்குவித்தல்.

### 2. லூக்கா நற்செய்தி ஆண்டு

கடந்த இரண்டு வருடங்களும் மத்தேயு, மாற்கு நற்செய்திகளை ஆழமாகக் கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்தினோம். இவ்வருடம் லூக்கா நற்செய்தி பற்றிய அறிவை ஆழப்படுத்துவோம். இதன்மூலம் லூக்கா நற்செய்தி பற்றி பல விடயங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

**செயல்பாடுகள்**

1. லூக்கா நற்செய்தியை மையப்படுத்தி சிறுவர், மறையாசிரியர், வளர்ந்தோருக்கு சிறப்பு வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பாசறைகள், கலந்துரையாடல்களை நடாத்துதல்.
2. பங்குகள், ஆணைக்குழுக்கள், ஞாயிறு பாடசாலை மட்டங்களில் இவற்றை மேற்கொள்ள ஆவன செய்தல்.
3. மறைக்கல்வி நடுநிலையத்தினூடாக லூக்கா நற்செய்தி பற்றிய போட்டிகளை நடாத்துதல்.
4. மறைமாவட்ட வெளியீடுகள் வழியாக லூக்கா நற்செய்தி பற்றிய அறிவைப் பகிர்தல்.
5. லூக்கா நற்செய்தியின் சிறப்புக்களாகிய பெண்கள், சிறுவர், ஏழைகள், கைவிடப்பட்டோர், அநாதைகள், அந்நியர்கள் மட்டில் சிறப்புக்கவனம் செலுத்துதல்.
6. லூக்கா நற்செய்தியின் சிறப்பு ஆன்மீகக் கூறுகளாகிய இறைவேண்டல், இறையாவி, சீடத்துவம், இரக்கம், மகிழ்ச்சி போன்ற இறையியல் கூறுகளில் கவனத்தை செலுத்துதல்.

### 3. சமூக விழிப்புணர்வு ஆண்டு

கிறிஸ்தவர் நாம் எமது சமூகத்தைப் பற்றியும் அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்பின்னணியில் தற்போது எமது சமூகத்தை சீர்குலைக்கும் முகநூல் (Facebook) மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீங்குகள் பற்றிய விழிப்புணர்வை எமது இளம் சமூகத்தினருக்கு வழங்கும் நோக்கோடு இவ்வாண்டை சமூக விழிப்புணர்வு ஆண்டாகவும் நாம் அறிவித்துள்ளோம். தற்போது அரச சிவில் மட்டத்திலும் போதைப்பொருள் கடத்தல், மற்றும் பாவனை பாரிய சமூகப் பிரச்சனையாகியுள்ளது. எனவே நாமும் அரசின் மற்றும் மாவட்ட சிவில் சமூகத்தின் உதவியினைப்பெற்று இத்தீமைகளுக்கு எதிராகப் போராடி எமது சமூகத்தை காப்பாற்றும் முயற்சியில் கரம் கோர்க்கலாம்.

**செயல்பாடுகள்**

1. முகநூல், போதைப்பொருள் ஏற்படுத்தும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு.
2. பங்கு, மறைமாவட்ட மட்டத்திலும் மற்றும் சிவில் சமூகங்களுடன் இணைந்து விழிப்புணர்வு பேரணிகளை மேற்கொள்ளுதல்.
3. வீதி (தெரு) நாடகங்கள் வாயிலாக விழிப்புணர்வுக் கல்வியினை ஊட்டுதல்.
4. பங்குகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டத்தில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை மேற்கொள்வது. ஆசிரியர்களோடு இணைந்து மாணவர்களுக்கு உதவுதல்.
5. பொலிஸ் (காவல் துறை) மற்றும் பாதுகாப்புப் படையினருடன் இணைந்தும் அவர்களது உதவியைப் பெற்றும் போதைப்பொருள் பாவனையால் வரக்கூடிய தீங்கிலிருந்து இளம் சமூகத்தைக் காத்தல்.
6. கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் மாணவர்களின் கவனத்தைத் திருப்புதல்.

இம்மூன்று தலைப்புகளிலும் கடந்த வருடம் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சிறப்பு ஆயத்தக் கருத்தரங்குகளை நாம் நடாத்தியிருந்தோம். தொடர்ந்து மக்களுக்கான விழிப்புணர்வை மறைமாவட்ட வெளியீடுகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக வழங்குவோம்.

குருக்கள், துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள் மற்றும் வழிபாடுகள், திருப்பலி, அருட்சாதனங்கள், மறைக்கல்வி, திருமலைதீபம், அலையோசை, ஆலயத் திருவிழாக்கள் - இவையெல்லாம் எமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள். நன்றியுணர்வோடு நாம் இவற்றைப் பயன்படுத்தி எமது ஆன்மீக, சமூக வாழ்வில் வளர்ந்திடுவோம்.

இறுதியாக, பிறந்திருக்கும் புதிய ஆண்டு (2019) மகிழ்ச்சி, சமாதானம், அர்ப்பணம், ஒத்துழைப்பு, ஒன்றிப்பு போன்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருவதாக. மூவொரு இறைவனின் ஆசீரையும், மரியன்னையின் வழிகாட்டலையும், புனித யோசேப் வாஸ் முனிவரின் பரிந்து பேசுதலையும் அனைத்துக் குடும்பங்கள் மீதும் இரந்துகேட்டு நிற்கின்றோம்.

கிறிஸ்துவில் என்றும் உங்கள்மேல் பற்றுள்ள,

+ Ch. Emmanuel

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
31.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரின் செய்தி

இறை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
இனிய நல்வாழ்த்துக்கள்!

மீண்டும் ஒரு வருட நிறைவில் பல சிந்தனைகளோடு டிசம்பர் மாதத்தை எதிர்கொள்கிறோம். இவ்வருடம் முழுவதும் எமது பங்குகளிலும், நிறுவனங்களிலும், மறைமாவட்டத்திலும் நடைபெற்ற எமது செயல்பாடுகளை நினைந்து இறைவனுக்கு நன்றிகூறுவோம்.

ஒரு வருடம் நிறைவுற்றாலும் திரு அவைக்கு புதிய திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கமிது. டிசம்பர் 2ம் திகதி முதல் திருவருகைக் காலத்தோடு நாம் புதிய திருவழிபாட்டு ஆண்டினுள் நுழைகிறோம். திருவருகைக் காலமும் கிறிஸ்து பிறப்புக் காலமும் இயேசுவின் வருகை பற்றி சிந்திக்கவும் எம்மை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்யவும் அழைக்கின்றன.

திருவருகைக் காலம் இயேசுவின் இரண்டாம் வருகைபற்றி தியானிக்கத் தூண்டுகின்றது. எமது இல்லங்களில் நாளாந்தம் செபிப்பதற்கு ஏற்றவாறு செபத் தாள்கள் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் டிசம்பர் 2ம் திகதி முதல் 24ம் திகதிவரை திருவருகைக் காலம் சிறப்பிக்கப்படுகின்றது. இக்காலத்தில் ஆண்டவரின் இரண்டாம் வருகை, அவரது மீட்பு, இறுதித்தீர்வு, தண்டனை எமது ஆயத்தம் பற்றி நாம் சிந்திக்கின்றோம். கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் முழுமையாகப் பயன்படுத்தி ஆண்டவர் இயேசுவின் பிறப்பை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட எம்மைத் தயார் செய்வோம்.

இயேசுவின் பிறப்பு விழா உலகமே கொண்டாடும் விழாவாகும். இது பலருக்கு வியாபார காலம், ஆனால் கிறிஸ்தவர் எமக்கோ உலகை மீட்கவந்த இயேசுவின் பிறப்பை நன்றியோடு கொண்டாடுகின்ற காலம். இறைவன் மனித அவதாரம் எடுத்து எமது மீட்பிற்கு வழிவகுத்தார். "நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்" (எரே 33: 15) எனும் இறைவாக்கு இயேசுவின் பிறப்போடு செயல்வடிவம் பெற்றது. "அவர் திருப்பெயரோ" வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும் (எசா9:6) என்பதும் இயேசு பற்றிய இறைவாக்கு. அமைதியின் அரசராக வந்த இயேசுவை வருடாவருடம் நாம் வரவேற்று, கொண்டாடி, அவர் தரும் அமைதியை அனுபவித்து, அமைதியின் மக்களாக சான்று பகர்வது எமது கடமையாகும். இதை உணர்ந்து நாம் செயல்படுவோம். உலகம் முழுவதும் வெளியரங்க ஆடம்பரங்களில் கவனம் செலுத்தும்போது நாம் எமது ஆன்மீக ஆயத்தங்களில் அதிக கவனமெடுத்து எம்மைத் தயார் செய்வோம். இதற்கேற்பவே திருவருகைக் காலத்தில் திரு அவையால் தரப்பட்டுள்ள அனைத்து திருவழிபாட்டு முறைகளும் வாசகங்களும் அமைந்துள்ளன.

இயேசுவின் பிறப்பின்போது இடையர்களும் ஞானிகளும் வந்து வணங்கினார்கள். அதேபோல இயேசுவின் பிறப்பையொட்டிய சம்பவங்கள், செய்திகள், மனிதர்கள் பல ஆழமான கருத்துக்களை எமக்குத் தருகின்றன. இக்காலத்தில் நாம் இவற்றை நற்செய்திகளில் வாசித்து எமது விவிலிய அறிவை ஆழமாக்குவோம். இயேசுவோடு மேலும் நெருக்கமாவோம்.

நவம்பர் மாதம் 24ம் திகதி எமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி கூட்டத்தின் வருடாந்த அமர்வு இடம்பெற்றது. இதற்கு ஆயத்தமாக இரண்டு ஆயத்தக் கருத்தரங்குகளும் நடைபெற்றன. இப்பின்னணியில் எதிர்வரும் 2019ம் ஆண்டில் 3 தலைப்புக்களை மையமாக வைத்து மறைமாவட்ட செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். அதன்படி:

1. **விவிலிய வாசிப்பு ஆண்டு**
2. **லூாக்கா நற்செய்தி ஆண்டு**
3. **சமூக விழிப்புணர்வு ஆண்டு**

இது பற்றிய விரிவான விளக்கத்தை நான் ஜனவரி மாதம் வெளியிடும் மேய்ப்புப்பணி மடலில் தருவேன். இத்தலைப்புகளை மையமாகக் கொண்டு நாம் பல திட்டங்களை உருவாக்கியுள்ளோம். இவற்றைக் கருத்திற்கொண்டு பங்குத்தளங்களில் ஒத்துழைப்பு வழங்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிறிஸ்மஸ் என்பது மகிழ்ச்சியின், அமைதியின், பகிர்வின் காலமாக அமைந்துள்ளது. மகிழ்ந்து கொண்டாடும் நீங்கள் தேவையிலிருக்கும் உங்கள் அயலவரையும் மறந்திடாமல் உங்கள் மகிழ்ச்சியில் அவர்களுக்கும் ஆண்டவரின் ஆசீரைக் கொடுங்கள். இக்காலம் உங்கள் அனைவருக்கும் ஆழமான ஆன்மீக அனுபவங்களைத் தருகின்ற காலமாக அமைய வாழ்த்துகின்றேன். பிறக்கும் குழந்தை இயேசு உங்கள் குடும்பங்களுக்குப் பெரும் பலமாக அமைய செபிக்கிறேன்.

அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!
கிறிஸ்துவில்,

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்




# பதிப்பாசிரியர் பகிர்வு

பிறப்பு பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம். ஒரு சில பிறப்புகள் வரலாற்றை ஆக்கியிருக்கின்றன. ஒரு சில பிறப்புகள் வரலாற்றை அழித்திருக்கின்றன. ஒரு சில பிறப்புகள் உலகத்தை அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றன. ஒரு சில பிறப்புகளோ உலகத்தை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றன. ஒரு சில பிறப்புகளால் உலகம் வாழ்ந்திருக்கிறது. ஒரு சில பிறப்புகளால் உலகம் வீழ்ந்திருக்கிறது. எல்லாப் பிறப்புகளும் வரலாற்றில் நிகழ்கின்றன. ஆனால் ஒரு சில பிறப்புகளால் வரலாறே நிகழ்ந்திருக்கிறது. இந்த ஒரு சில பிறப்புகளில் ஒன்றான, வரலாற்றில் நிகழ்ந்தாலும் வரலாற்றை மாற்றியமைத்த ஒரு பிறப்பைக் கொண்டாட வந்திருக்கின்றோம்.

கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகள் ஒரு கதை வடிவில் விளக்கப்பட்டிருந்தாலும், அதில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளும், பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களும் ஆழமானவை. அதிசயிக்கத்தக்கவை. இப்படிப்பட்ட அடையாளங்களுள் ஒன்றைப் பற்றி உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

பெத்லகேம்: யூதா நாட்டில் இருந்த ஒரு சிறிய ஊர்! "சிற்றூர்" என்று ஒதுக்கப்பட்ட ஊரில், இன்னுமொரு ஒதுக்கப்பட்ட இடம் இருந்தது. அதுதான் மாட்டுத்தொழுவம்! இங்கு இயேசு பிறந்தவுடன், அந்த மகிழ்ச்சியான செய்தி சொல்லப்பட்டது சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நபர்களாக, கீழான நபர்களாக, தாழ்ந்தவர்களாக கருதப்பட்ட இடையர்களுக்கு.

இதிலிருந்து சொல்லப்படும் செய்தி:-

வல்லமையான கடவுள் தேடிச் சென்றது வலிமையான மனிதர்களையும், பெரிய இடங்களையும் அல்ல! இந்த உலகத்தையே தன் கையில் வைத்திருக்கும் கடவுள், தம் மகனின் பிறப்புக்காகத் தேடிச் சென்றது எல்லா வசதிகளும் நிறைந்த இடத்தையல்ல. மாறாக சிறியவையாக, ஒதுக்கப் பட்டவையாக, ஒன்றும் இல்லாதவையாக, மடமையாகக் கருதப்பட்ட இடங்களையும், மனிதர்களையுமே!

வலிமையானதை, வல்லமையானதை, பெரியதையும் பேராற்றல் நிரம்பியதையும், வியப்பூட்டுவதையும், விந்தையானதையும் தேடிச் செல்வது மனித இயல்பு. மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாயும் நதிபோல, ஒதுக்கப்பட்டவர்களையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும், கடையதையும், கடைசியானவற்றையும் சிறியவற்றையும் சிதைக்கப்பட்டவற்றையும் நோக்கிச் செல்வது கடவுளது இயல்பு.

"மனித இயல்பை அகற்றிவிட்டு, கடவுளது இயல்பை அணிந்துகொள்வது எப்போது?' கடவுள் இயல்பை நமதாக்கிக்கொள்ள அரியதொரு வாய்ப்பை கிறிஸ்து பிறப்பு விழா நமக்குக் கொடுக்கின்றது.

வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள். வளமான, நம்பிக்கை நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன்.

அருட்பணி. கிங்ஸ்லி றொபட்

# மறைமாவட்டக் கல்விச்சேவை செய்திகள்

**ஒளிவிழா - பன்குளம் கல்வி வலயம்**

இப்பிரதேசத்தில் முதன் முறையாக இவ்வருடம் கிறிஸ்மஸ் ஒளிவிழா கடந்த 28 கார்த்திகை 2018 புதன்கிழமை அன்று மொறவெவ தெற்கு சிங்களப் பாடசாலையில், அப்பாடசாலையின் அதிபர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இவ்வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ஜயதிலக அவர்களின் அயராத முயற்சியால் இது சாத்தியமானது. இவ்வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலிருந்தும் (சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் - 08, தமிழ் - 02, முஸ்லிம் - 02) அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

கல்கடவல சிறீ சுமணதார தேரர், அருட்பணி சுதர்சன் (பங்குத்தந்தை - கன்னியா), திரு யோகேஸ்வர குருக்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர். முதன்முறையாக இப்பாடசாலை மாணவர்கள் (பௌத்த, இந்து, முஸ்லிம்) நத்தார் கரோல் கீதங்களை பாடியமை சிறப்பம்சமாகும்.

பாலன் குடில் அமைக்கப்பட்டு, நத்தார் தாத்தாவின் நடனம் எல்லோராலும் வரவேற்கப்பட்ட நிகழ்வாக அமைந்தது. திருகோணமலை லொயோலா கல்வி நிறுவனத்தின் மாணவர்களின் நத்தார் நாடகம் இங்கு சிறப்பம்சமாக நடந்தேறியது.

இறுதியாக அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு விழா இனிதாக நிறைவுற்றது.

**ஒளிவிழா - கேமரங்கடவெல கல்வி வலயம்**

இப்பிரதேசத்திலும் முதன்முறையாக இவ்வருடம் கிறிஸ்மஸ் ஒளிவிழா கடந்த 30 கார்த்திகை 2018 வெள்ளிக்கிழமையன்று கல்கடவல சிங்களப்பாடசாலையில், இவ்வலயக் கல்விப் பணிப்பாளர் சிறீ சுமணதார தேரர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

பௌத்த மதகுருவான இத்தேரரது அயராத முயற்சியால் இது சாத்தியமானது. இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளில் 05 பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வுகளில் பங்கேற்றனர். அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

நுவரெலியா வலய அங்கிலிக்கன் சபை Arch Deacon (அங்கிலிக்கன் சபைக் கோட்ட முதல்வர்) அருட்திரு பாலகிருஸ்ணன், அருட்பணி ஜெயரெத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

தேரரின் அறிமுக உரையில், "எல்லா மதத்தினரும் எல்லா மதங்களையும் பற்றி அறிந்திருப்பது மத வேற்றுமைகளை களைய உதவும்" எனக் குறிப்பிட்டார்.


பௌத்த மாணவர்களின் கரோல் கீதங்கள், நத்தார் தாத்தாவின் பரிசுகள் வழங்கலோடு விழா சிறப்புற்றது.

தகவல் : அருட்பணி. சீ. றோ. ஜெயரெத்தினம்
இயக்குனர் - கல்வி
திருகோணமலை மறைமாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 18

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்




அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## ஆசிரியர் : நல்ல மனிதராய் இருப்பது அவசியம்

இந்தத் தலைப்பை பார்த்தவுடன் எல்லோர் மனதிலும் எழும் அவை எதுவென ஊகிக்கலாம். ஏன் ஆசிரியர் மட்டுமா? எல்லோரும் நல்லவர்களாக இருக்கத்தானே வேண்டும் என நீங்கள் நினைப்பது நியாயமானது. ஆனால் ஆசிரியருக்கு இது மிக மிக பிரத்தியேகமாக இருக்க வேண்டிய பண்பாகும். ஏனெனில் பெரும்பாலும் ஆசிரியர்களே மாணவர்களின் முன்மாதிரியாக (Role Model) இருக்கின்றனர். முன்மாதிரிகளைத் தேடிக் கொண்டிருக்கும் அதேவேளை அவைகளைப் பற்றிக்கொள்ளும் பருவம் மாணவப் பருவமெனலாம். அவ்வகையில் நல்ல ஆசிரியர் இங்கு முக்கியத்துவம் பெறுகிறார்.

குரு - சிஷ்ய கல்வி முறையில் வார்த்தைகளை விட வாழ்வாலேயே குரு மாணவர்களுக்குக் கற்பித்தார். நடைமுறையில் பார்க்கின்ற போது அனைத்துக் குருக்களும் முன்மாதிரியானவர்களாகவும் இக்காலத்து எல்லா ஆசிரியர்களும் புனிதர்களாகவும் கருதிவிட முடியாது. விதிவிலக்குகள் எங்கும் எக்காலத்திலும் உண்டு. ஆனால் ஆசிரியப் பணியில் இருக்கும் எல்லா ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும்.

மாணவர்கள் மிக நுணுக்கமாக அவதானிக்கக் கூடியவர்கள். பொய்மையையும் வெளிவேடத்தையும் கண்டுபிடிக்கும் திறமை அவர்களிடமுள்ளது. ஆசிரியரின் உண்மைத்தன்மையை உய்த்துணர பல சந்தர்ப்பங்கள் பாடசாலையினுள்ளே உருவாக்கப்படுகின்றன. எவ்வளவுதான் நல்லவர்களாக ஆசிரியர்கள் தங்களைச் சித்தரிக்க முயன்றாலும் ஒரு சந்தர்ப்பம் அவர்களது சுயரூபத்தை வெளிப்படுத்தப் போதுமானதாகும். ஆகவே நிஜ வாழ்க்கையில் ஆசிரியர்கள் நேர்மையுடன் கூடிய நல்லவர்களாக இருப்பது அவசியமாகின்றது.




ஆசிரியர்கள் தனிப்பட்ட ஒழுக்கத்திற்கு மாறான (Immoral) செயற்பாடுகள் கூட மாணவர்களில் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இவ்வாறான ஆசிரியர்கள் ஒழுக்க விழுமியங்களை ஆத்மாத்த ரீதியாக கற்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

நல்ல ஆசிரியர்கள் போதிய திறமையானவர்களாக இல்லாவிட்டாலும் மாணவர்களின் மனதில் இலகுவாக இடம்பிடித்து விடுவார்கள். அதேவேளை மாணவர்களில் பற்றுள்ள நல்ல ஆசிரியர்கள் தமது திறமைகளை மாணவர்களுக்காகவேனும் விருத்தி செய்து கொள்வார்கள். மாணவ சமூகத்தினரின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு தேவைப்படுபவர்கள் நல்ல ஆசிரியர்களே.

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



### 24. சுற்றுமடலும் ரொமேரோவும்

1976ஆம் ஆண்டு நவம்பரில் எழுதிய அருட்பணி மடலில் ஆயிரக்கணக்கான காப்பித் தோட்ட தொழிலாளர்களின் நிலையைக் குறித்து சிந்திக்க அழைத்தார் ரொமேரோ.

திருச்சபை கடவுளின் கட்டளையைக் கூக்குரலிட்டு அறிவிக்க வேண்டும். பூவுலகும் அதில் உள்ளவை யாவும் எல்லோர்க்கும் உரியது. உலகின் வளம் அனைத்தும் நீதியிலும் இரக்கத்திலும் அனைவருக்கும் சேர வேண்டும். நீதியான ஊதியம் கொடுக்காத நிலை வேதனை தருகிறது. மழையின் மகிழ்ச்சியும் அறுவடையின் பலனும் அனைவருக்கும் வேண்டும் (யாக் 5:4) என்பதை மேற்கோள் காட்டினார்.

போராட்டங்களில் ஈடுபடுவதற்கு முன்பே மக்கள் மீது மிகுந்த கரிசனை கொண்ட ஒரு ஆயராகவே செயல்பட்டார்.

அவரது சுற்றுமடல்கள் எப்போதும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து செயல்வடிவம் கொடுப்பதாகவே அமைந்தன. போராட்டச் சூழலில் இது முற்றிலும் பொருந்திப்போக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 25. யூகங்களும் ரொமேரோவும்

புரட்சிகர சிந்தனைகளால் தனது நிலைப்பாட்டை மாற்றியிருந்தாலும் பிறரது பார்வையிலும் செயலிலும் ஒரு பழமைவாதி என்றே கருதப்பட்டார்.

இன்னும் சிறப்பாக ஓய்வுபெறும் வயதிலிருந்த பேராயர் லூயிஸ் சாவஸ்சுடன் ஒப்பிடும்போது இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அரசும் இராணுவமும் அதிகார வர்க்கத்தினரும் மனித உரிமைப் போராளி சாவஸ் மாறி பாதுகாப்பான பழமைவாதி ரொமேரோ பேராயராக வந்தால் நல்லது என்றே நினைத்தனர்.

மறைமாவட்டத்தின் முற்போக்கு வசதிகள் இதற்கு மாறாக ஆயர் அர்துரோ ரிவேரா தமஸ் வந்தால் நல்லது என நினைத்தனர். ரொமேரோ விடுதலை இறையியலை கடுமையாக விமர்சிப்பவர் என்ற எண்ணம் இந்த முற்போக்கு குருக்களுக்கு இருந்தது. இரு அணிகளும் ரொமேரோவின் கருத்தியல் ஒளிக்கற்றையின் முழுமையைக் குறிப்பாக தற்போது நிகழ்ந்திருந்த உள்ளார்ந்த மனமாற்றத்தை அறிந்திருக்கவில்லை.

### 26. அறிவின் குரல் ரொமேரோ

1977இல் சான் சால்வதோரில் புதிய பேராயர் தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் குருக்கள் மத்தியிலும் பிளவு இருந்தது. பெரும்பான்மையான குருக்கள் பழமைவாத ஆயர் சான்செஸ்சை விட சற்று முற்போக்கான அர்துரோ ரிவேரா தமஸ் அவர்ளையே விரும்பினர்.

ஏழைகளுக்காக குரல் கொடுப்பதிலும் நில உடைமையாளர்கள் மற்றும் அரசின் தீங்குகளைக் கண்டிக்கவும் தமஸ் தயங்கவில்லை. அரசுக்கு இவர் கம்யூனிச ஆயராகத் தென்பட்டார். ரொமேரோ அரசுக்கும் வசதி படைத்தோருக்கும் ஆதரவான ஒரு கருவி என்றே குருக்கள் கருதினர்.

அடுத்த பேராயர் ரொமேரோ என உரோம் முடிவு செய்தது. நாட்டில் மறுமலர்ச்சி வேண்டும் என உரோம் விரும்பினாலும் திருச்சபைக்கு எந்த சேதமும் விளைவிக்க விரும்பவில்லை.

2000 ஆண்டுகளாக கட்டிக் காத்த நிறுவனத் திருச்சபைக்குத் துன்பம் அல்லது தனது தற்போதைய அதிகார நிலையை இழத்தல் என்பதில் உரோமுக்கு ஒருபோதும் உடன்பாடு இல்லை. குருக்களும் செபத்திற்குப் பதிலாக துப்பாக்கிகளை நம்புகிறார்களே என்ற அச்சமும் உரோமுக்கு இருந்தது.

செபம் என்ற ஆயுதத்தால் மட்டும் வெற்றி இல்லை என்பதும் உரோமுக்குத் தெரியும். ஆனால் எல்லாவற்றையும் பகுத்தாயும் போது எப்போதும் பலம்மிக்க ஒரே ஆயுதம் செபம் என்ற சிந்தனையை இளம் குருக்களை ஏற்றுக் கொள்ள வைப்பதிலும் சிரமம் இருந்தது.

இந்த இக்கட்டான சூழலில் ஒரு அறிவுசார் குரல் தேவைப்பட்டது. அந்த குரல்தான் ரொமேரோ. சான் சால்வதோரின் பேராயராக ரொமேரோ தெரிவு செய்யப்பட்டார். அவர் பொறுப்பேற்கும் போது அதிருப்தி தெளிவாக வெளிப்பட்டது. பொறுப்பேற்கும் சதுக்கத்தில் கலவரச் சூழல் ஏற்பட்டு காவல்துறையின் துப்பாக்கிச் சூடும் நடந்தது. எல் ரொசாரியோ ஆலயத்தில் மக்கள் நுழைந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

ஓய்வுபெற்ற பேராயர் சாவஸ்சும் மற்றும் இன்னொரு ஆயரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். பேராயர் ரொமேரொ சம்பவ இடத்தில் இல்லை. பழைய மறைமாவட்டத்திற்குத் தனது பொருட்களை எடுத்து வரச் சென்றிருந்தார் பேராயர் ரொமேரோ.

தொடரும்..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநூலில் கிறிஸ்துவை அறிவோம்

கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாடு தேவையா? புதிய ஏற்பாடு மட்டும் போதுமா? எனக் கேட்பவர் பலர்.

புதிய உடன்படிக்கையின் தலைவராம் கிறிஸ்துவும் அவருடைய பணிகளும்தான் புதிய உடன்படிக்கையின் மையம். ஆயினும், கிறிஸ்துவிற்கு இறைத்தந்தை இட்ட பணியை அலசும்போது அவர் புதிய ஏற்பாட்டையும் விஞ்சி நிற்பது புரியும்.

***1. பாவமன்னிப்பும் இரத்தமும்***

"இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" (மத் 26:27ஆ-28).

இந்தக் கூற்று மாற்கு, மத்தேயு, லூக்கா போன்றோர் எழுதிய ஏடுகளிலும் பவுலடியாரின் கொரிந்தியர் முதல் திருமுகத்திலும் எழுதப்பட்டுள்ள மூலபாடம்.

இந்தப் பாடம் இயேசுவின் பணிவாழ்வுக்கான இலக்கைத் தெளிவுபடுத்துகிறது. அதோடு பழைய புதிய ஏற்பாடுகளின் தொடர்பையும் உறவையும் வெளிக்கொணர்கிறது. 'பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் என் இரத்தம்.' பாவமன்னிப்புக்காக, இரத்தம் என்னும் இரண்டு சொற்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைப்பவை. பாவம் எனும் தீமை இல்லையெனில், இயேசு மனிதனானதும் சிலுவைப்பாடு பட்டதும் இரத்தம் சிந்தியதும் தேவையற்றவை.

***2. இயேசு விடுவிக்கிறார்***

"யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்... அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர்தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத் 1:20-21).

பல வண்டிகளிலும் வீடுகளிலும் "இயேசு விடுவிக்கின்றார்" என்று எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். அதைக் காண்கின்ற கிறிஸ்தவரல்லாதோர், எதிலிருந்து விடுவிக்கிறார் எனத் தெரியாமல் குழம்புகின்றனர். "சமூக விடுதலையா? பொருளாதார விடுதலையா? அரசியல் விடுதலையா? உள-உடல் நோய்களிலிருந்து விடுதலையா? இனவிடுதலையா? இராணுவ விடுதலையா? எனப் பலவாறு எண்ணுகின்றனர்.

ஆனால் விவிலியச் சொற்கள் தெளிவானவை. விவிலியத்தில் ஒருவரின் பெயர், அவரது இயல்பு, பணி மற்றும் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. இயேசு என்னும் பெயர் தெளிவான விளக்கத்தைக் கொண்டுள்ளது.

"ஏனெனில் அவர்தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்."

இயேசு விடுவிக்கின்றார். இயேசு தந்த விடுதலையின் உடனடி நோக்கம், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் உள-உடல் விடுதலை மட்டுமல்ல என்பதை இயேசுவின் சொற்களும் செயல்களும் எடுத்தியம்புகின்றன. லூக்கா 7:22-ன்படி பல்வேறு வகையான உடல் நோயுற்றோர் குணம் பெறுகின்றனர். இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. இவை எல்லாமும் இயேசுவை ஏற்றுக்கொள்கிற நம்பிக்கையின் அடிப்படையில் நடக்கின்றன.

நாசரேத்தில் இயேசு அரும் செயல் எதுவும் ஆற்றவில்லை. ஏனெனில் அங்கே அவர்கள் அவரை நம்பவில்லை. பாவமன்னிப்புக்கென்று அவர்தம் இரத்தத்தைச் சிந்துகிறார். பின்னர், தூய ஆவியாரை அனுப்புகிறார். உலகின் பாவம், நீதி, தண்டனை, மனந்திரும்புதல், வாழ்வு ஆகியவற்றைத் தூய ஆவியார் உணர்த்துகிறார்.

இயேசுவின் பாவமன்னிப்புப் பணியைத் தூய ஆவியார் திருஅவையில் தொடர்கிறார். உலகின் பாவத்தையும் இயேசு கொணர்ந்த மீட்பையும் இயேசு தன் பாடுகளின் மூலம் பாவம், சாத்தான் மற்றும் சாவின்மீது பெற்ற வெற்றியையும் தூய ஆவியார் தெளிவாக்குகிறார்.

புதிய ஏற்பாட்டின் வேறு பல கூற்றுகளும் 'பாவத்திலிருந்து மானிடரை மீட்கவே இயேசு வந்தார்' என்பதை உறுதிபடக் கூறுகின்றன (1 திமொ 1:15, உரோ 5:8, திப 13:38).

***3. முதல் நோக்கம் அன்பு அல்ல***

விவிலியத்தின் முதல் நோக்கம் கடவுளின் அன்பை வெளிப்படுத்துவது அல்ல. நமது மீட்பரது பணியின் இலக்கோ முடிவோ அன்பு அல்ல. இயேசுவின் மெசியா பணியின் நோக்கம் அன்பு அல்ல. கடவுளது அன்பு அவர் மகனை ஒரு பணிக்காக அனுப்பியது.

"நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவா 4:9). இதே இறையியலைப் பவுலடியாரும் வலியுறுத்துகிறார். "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்ட தம் அன்பை எண்பித்துக்காட்டியுள்ளார்" (உரோ 5:8).

பாவத்திலிருந்து மானிடரை மீட்பதே இயேசு கிறிஸ்துவின் தலையாய பணி. அன்பு அதற்கு உந்து சக்தியாகிறது. இயேசு கிறிஸ்து தம் பாடுகளாலும் உயிர்ப்பாலும் ஈட்டிய இந்தப் பணியின் நிறைவில் பழைய புதிய உடன்படிக்கைகளின் தொடர்பை, ஒன்றிப்பை நாம் காண்கிறோம்.

***திருச்சட்டத்தின் பணி***

"திருச்சட்டத்தை அழிக்க அல்ல, மாறாக நிறைவேற்றவே வந்தேன்" என இயேசு அடிக்கடி கூறுகிறார். அப்படியெனில் கடவுள் இஸ்ரயேலரோடு செய்த உடன்படிக்கையையும் இயேசு நிறைவுக்குக் கொண்டு வருகிறார்.

திருச்சட்டத்தின் பணி என்ன? மக்களது பாவ இயல்பை உணர்த்தி, தீமையை வெளிப்படுத்தி, பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்று, அவர்களைக் கடவுளின் மக்களாகுமாறு அன்னியமாக்குவதே திருச்சட்டத்தின் பணி. சட்டம் தொடங்கிய பணியை நிறைவுக்குக் கொண்டுவரும் பணிதான் இயேசு கிறிஸ்துவுக்குத் தந்தையால் தரப்பட்டது. பாவத்தின் தளைகளை அறுத்தலே அவரது பணி.

தன்னிலே திருச்சட்டம் பாவங்களை ஒழிக்க முடியவில்லை. பவுலடியார் இதை விரிவாக விளக்குகின்றார். கலாத்தியர், உரோமையர் திருமடல்களில் பழைய - புதிய உடன்படிக்கைகளுக்கிடையே உள்ள தொடர்பையும் வேறுபாட்டையும் தெளிவுபடுத்துகிறார் (உரோ 3:21-22).

நம்பிக்கையின் அடிப்படையில் நாம் இறைவனுக்கு ஏற்புடையவராக்கப்படுவதற்காக, நம்மைக் கிறிஸ்துவிடம் கூட்டிச்செல்லும் வழித்துணையாகத் திருச்சட்டம் செயல்பட்டது.

இப்பொழுது நாம் நம்பிக்கை கொண்டுள்ளதால் வழித்துணையாகிய திருச்சட்டத்தின் பொறுப்பில் நாம் இல்லை என்கிறார் பவுலடியார். எனவே வாக்குறுதிக்கு உரியவரான இயேசு கிறிஸ்து வரும்வரை குற்றங்களை எடுத்துக்காட்டவே திருச்சட்டம் பயன்பட்டது (கலா 3:24-25, 19:16).

இயேசு கிறிஸ்து நிறைவேற்றிய தலையான பணியாகிய பாவங்களிலிருந்து மீட்பை நாம் புரிந்து கொள்ள நமக்குப் பழைய-புதிய ஏற்பாடுகளின் சத்தும் சாரமும் தெரியவேண்டும். எனவே தான் எரோணிமுசு கூறினார், "திருவிவிலியத்தை அறியாதவர் கிறிஸ்துவை அறியாதவர்."

***திருவிவிலியம் நமது மீட்பின் வரலாறு***

இயேசுவின் பாடுகள், உயிர்ப்பால் நாம் மீட்படைகிறோம். தந்தையோடும் பிறரோடும் ஒப்புரவாகிறோம். இதுவே மீட்பின் மறைபொருள். கிறிஸ்துவில் கடவுள் தம் திட்டத்தை மீட்பின் மறைபொருளை வெளிப்படுத்தியுள்ளார் (எபே 1:9-10).

மானிடரை மீட்கும் திட்டம் வகுத்த இறைத்தந்தை மானிட வரலாற்றில் ஊடுருவுகிறார். அதன் மூலம் மானிட இனத்தின் வரலாறு மீட்பு வரலாறாகிறது. இஸ்ரயேல் மக்கள் தங்கள் நம்பிக்கை அறிக்கையில் தங்களுக்காக இறைவன் ஆற்றியதை எடுத்தியம்பினார்.

இச 26:5-6, 21-25, விப 12:26-27, இச 6:20-24, யோசுவா 24:2-3, 1 சாமு 12:8 முதல், திபா 136, 105, 78, 135 போன்றவை நம்பிக்கை அறிக்கையின் சான்றுகளாகும்.

கடவுள் நமக்காக வல்ல செயல்களைச் செய்தார் என உணர்ந்த இஸ்ரயேலர் தங்களைத் 'தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' எனப் பெருமைப்பட்டனர். சீனாயில் கடவுள் அவர்களோடு உடன்படிக்கையில் உறவாடி அவர்களைத் தம் சொந்த மக்களாக்கினார் (விப 19:4-6).

தேர்ந்தெடுக்கப்படுதலும் உரிமைப்பேறான மக்களாவதும் சில கடமைகளையும் தந்தன. இஸ்ரயேல் இன வரலாற்றின் தொடக்கத்திலேயே அது வலியுறுத்தப்பட்டது. ஆபிராமை அழைத்த ஆண்டவர், "உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார் (தொநூ 12:1-3).

இஸ்ரயேலின் தேர்வு அந்த இனத்திற்காக மட்டுமல்ல. எல்லா மக்களினங்களுக்கும் ஆசி கொணரவேண்டிய கடமை அதன்மேல் சுமத்தப்பட்டது. அதிகாரத்திற்கும் பெருமைக்குமான அழைப்பல்ல. பணி புரிவதற்கான அழைப்பு. கடமையை நிறைவேற்றுவதற்கான அழைப்பு.

இஸ்ரயேல் இக்கடமையை மறந்தபோதெல்லாம் போட்டி, இன வெறி, மிதமிஞ்சிய நம்பிக்கை போன்றவற்றால் தீமை செய்தது. கடவுள் அவர்களை அந்நியர் கையில் கொடுத்துத் தண்டித்துத் திருத்தினார்.

ஆபிரகாம் நம்பியதால் பெற்ற வாக்குறுதிகள் புதிய ஏற்பாட்டுத் திருஅவையில் நிறைவு பெற்றுள்ளன. திருஅவை உலகில் ஆற்றவேண்டிய மீட்புப் பணிக்காகவே அழைக்கப்பட்டுள்ளது. மானிட மீட்பின் கருவியாகவும் அருள்சாதனமாகவும் விளங்கவேண்டியதே திருஅவையின் பணி. நாம் திருவிவிலியத்தை அறிந்தால்தான் கிறிஸ்துவை அறிந்தவர்களாவோம். கிறிஸ்துவை நம்பி அவரை ஏற்றுக்கொண்டால்தான் நமக்குத் தரப்பட்டுள்ள பணியைக் கிறிஸ்துவின் பெயரால் தொடர்ந்தாற்ற முடியும்.

**அருள்பணி. கி. வி. சுந்தரிமைந்தன்**
**பாதைகாட்டும் விவிலிய விருந்து.**

## தெரிந்து கொள்வது என்பது.........

உண்மையைத் தெரிந்து கொள்வது என்பது
உண்மையை நிலைநாட்டுவது
இயேசுவைத் தெரிந்து கொள்வது என்பது
இயேசுவைப் பின்பற்றுவது
பாவத்தைத் தெரிந்து கொள்வது என்பது
பாவச் சூழலை அகற்றுவது
துன்பத்தைத் தெரிந்து கொள்வது என்பது
உலகத்தை துன்பத்திலிருந்து விடுவிப்பது
கடவுளைத் தெரிந்து கொள்வது என்பது
இறை சமூகத்திற்காக உழைப்பது.

**இறையியல் வல்லுனர் சொப்ரினோ**

## குட்டிக்கதை ஒன்று
## கோபத்தை அடக்குவது எப்படி



ஒரு மாணவன் ஒருமுறை தன் குருவிடம் வந்து மாஸ்டர், எனக்கு அடக்க முடியாத கோபம் வருகிறது. அதை எப்படி குணப்படுத்துவது என்று கேட்டான். அப்படியானால் "ஏதோ ஒன்று உன்னை பயங்கரமாக ஆட்டி வைக்கிறது, சரி இப்போது அந்த அடக்க முடியாத கோபத்தைக் காட்டு என்று கூறினார்.

அதற்கு மாணவன் அதை இப்பொழுதெல்லாம் காட்ட முடியாது. எதிர்பாராத நேரத்தில்தான் வருகிறது என்றான். அதற்கு குரு "அப்படியென்றால் அது உன்னுடைய சொந்த இயல்பாக இருக்க முடியாது. அவ்வாறு உனக்கு சொந்தமானதாக இருந்தால் அதை எந்தநேரத்திலும் காண்பித்திருப்பாய். நீ பிறக்கும் போது அதைக் கொண்டு வரவில்லை, உன் பெற்றோரும் உனக்கு அதைக் கொடுக்கவில்லை. அப்படியிருக்க உனக்குச் சொந்தமில்லாத ஒன்றை உன்னுள் வைத்திருக்கிறாய் என்பதை யோசித்துப் பார் உனக்கே புரியும் என்று கூறினார்.

**இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியத்தை வாசிப்பது எப்படி?



1.முன்னுரை.

விவிலியத்தை வாசிப்பது எப்படி? என்ற கேள்விக்கு எளிதாய் விடைகிடைக்கும் என்று எண்ணலாம். விவிலியத்தைத் திறந்து அப்படியே வாசிக்க வேண்டியதுதானே. இதற்கு விளக்கம் தேவையா? என்ற கேள்வியும் நம் மனதில் எழலாம். விவிலியத்தைத் திறந்து வார்த்தைக்கு வார்த்தை அப்படியே விளக்கம் கண்டிட முடியாது. ஏனென்றால் விவிலியப் பகுதிகள், பல்வேறு படி நிலைகளைக் கடந்து நம் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் படிமுறைகளையும், விவிலியம் வாசிக்கின்றபொழுது நாம் கருத்திற்கொள்ள வேண்டிய காரியங்களையும் இக்கட்டுரை நமக்கு விளக்குகின்றது.

2.விவிலியப் பகுதிகளின் பின்புலன்கள்.

இதை ஆங்கிலத்தில் "Reading behind the Text" என்று அழைப்பார்கள். பொதுவாக விவிலியப்பகுதிகளை வாசிக்கையில், அப்பகுதிகள் கூறுகின்ற செய்திகளை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்துக்கொள்கின்றோம். நாம் வாசிக்கும் ஒவ்வொரு விவிலியப் பகுதியும் பல்வேறு பின்புலன்களைக் கொண்டுள்ளது. பல படி நிலைகளைக் கடந்து வந்துள்ளது. அந்தப் படிமுறைகளைத் தெரிந்துகொண்டு விவிலியத்தை வாசிப்பது நமக்குச் சரியான புரிதலைத் தரும். அந்தப் படிமுறைகளைக் கீழ்காணும் வரைபடம் தெளிவாக்குகின்றது.

| |
|---|
| வரலாற்று நிகழ்வுகள் |
| விவிலியப் பகுதிகள் எழுத்து வடிவம் பெறல் |
| எழுதியவர், யாருக்கு எழுதப்பட்டது? |

### 2.1 வரலாற்று நிகழ்வுகள்.

பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் வரலாற்றில் நடந்த நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கின்றன. அவை நிகழ்ந்த காலத்திற்கும் எழுதப்பட்ட காலத்திற்கும் இடைவெளி அதிகமாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் பல, பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் எழுதப்பட்டன. சமூகத் தொடர்பு சாதனங்கள் இல்லாத அத் தொன்மைக் காலத்தில் நிகழ்வுகளை நடந்தது போல பதிவு செய்வது மிகக்கடினமே. வாய் மொழியாகப் பரவிக்கிடந்த செய்திகளே எழுத்து வடிவம் பெற்றன. எனவே விவிலியத்தைத் தொடர்ந்து வாசிக்கின்ற வழக்கம் உள்ளவர்கள், தாங்கள் சந்திக்கின்ற பகுதிகளில் காணப்படும் நிகழ்வுகள் நிகழ்ந்த காலத்திற்கும் எழுதப்பட்ட காலத்திற்கும் உள்ள இடைவெளியைத் தெரிந்து கொண்டால், நிகழ்வுகள் குறித்துக் காட்டும் செய்திகள் நமக்குத் தெளிவாய்த் தெரியும்.

### 2.2 எழுத்து வடிவம் பெறல்

உலகின் எல்லாக் கலாச்சாரங்களிலும் நிகழ்வுகள் எழுத்துருவம் பெறுகின்ற பொழுது, சில நோக்கங்களே அதற்குக் காரணமாய் அமைந்தன. அரசர்கள் அரசாட்சி நிகழ்வுகளை, எழுதலாயினர். அரசர்களுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகளை எழுத்து வடிவம் கண்டன. தத்துவங்கள் எழுத்தாக்கம் பெற்றன. சமயம் சார்ந்த நிகழ்வுகளும் எழுத்துருவம் பெற்றன. விவிலியத்தின் ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு காலத்தில் எழுதப்பட்டது. விவிலிய அறிஞர்கள் ஒவ்வொரு நூல் எழுதப்பட்ட காலத்தை ஆராய்ச்சி செய்து நமக்குத் துணை புரிந்திருக்கின்றார்கள். பழைய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட காலத்தைத் திட்டவட்டமாய் நிர்ணயிப்பதில் எப்போதும் மாற்றுக் கருத்துகள் தோன்றிய வண்ணமாய் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டு நூல்கள் சிலவற்றின் காலத்தை எளிதாய்த் தீர்மானித்து விடலாம்.

எனவே, எழுதப்பட்ட காலத்தைத் தெரிந்துகொண்டு வாசிப்பது புரிதலுக்குப் புதிய பொலிவு கொடுக்கும்.

### 2.3 யாருக்கு எழுதப்பட்டது.

இக்கேள்வி விவிலியப் பகுதிகள் எழுதப்பட்ட சூழலை ஆராய்கின்றது. விவிலியத்தின் ஒவ்வொரு பகுதியும் குறிப்பிட்ட இடத்தில் வாழுகின்ற மக்களுக்காக எழுதப்பட்டது. மக்களின் தேவைகள், சிக்கல்கள், மற்றும் இறை நம்பிக்கையில் தளர்ச்சிகள் ஏற்பட்டபோது அவற்றிற்குப் பதில் கொடுக்கும் வண்ணமாய் எழுதப்பட்டன. எனவே விவிலியம் வாசிக்கையில், வாசிக்கின்ற பகுதி யாருக்கு எழுதப்பட்டது? மக்களின் சூழல் என்ன? போன்றவற்றை அறிந்துகொள்வது அவசியமாகின்றது.

### 2.4 எழுதியவர்.

விவிலிய நூல்கள் பலவற்றைத் தனிநபர்கள் எழுதினார்கள். மற்றும் பலவற்றைத் தனிநபர்கள் தொகுத்தார்கள். தனிநபர்கள் விவிலிய நூல்களை எழுதியபொழுது அவர்களின் இறையியல், கருத்தியல்கள், விருப்பு, வெறுப்புகள் மற்றும் அனுபவங்கள் அவர்கள் எழுதிய நூல்களுக்கு மேல்வரிச்சட்டமாய் அமைந்தன. தனிநபர்கள், ஏற்கனவே எழுதப்பட்டு மக்கள் மத்தியில் பழக்கத்தில் இருந்த பகுதிகளைத் தொகுத்தபொழுது தேர்வுசெய்து தொகுத்தனர். தங்களின் கருத்தியல்களுக்கும், மக்களின் தேவைகளுக்கும் ஏற்ற பகுதிகளைச் சேர்த்துக்கொண்டனர். விவிலிய நூல்கள் முழுமை பெற்றபொழுது அந்நூல்களின் இறையியல் கருத்துகளுக்கு அச்சாரமாய் அமைந்தன. எனவே வாசிக்கின்ற விவிலியப் பகுதிகளின் ஆசிரியர் யார்? அல்லது தொகுப்பாளர் யார்? என்று தெரிந்துகொண்டு வாசிப்பது புதிய புரிதலைத் தரும்.

## 3. மொழிநடை.

மொழியொன்றின் வரலாற்றைக் கொண்டு அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களின் வரலாற்றினையும் கணக்கிட்டுவிடலாம். விவிலிய நூல்கள் எழுதப்பட்ட மொழிகளை ஆராய்கின்ற பொழுது, விவிலியம் காட்டும் நிகழ்வுகள், மக்களின் கலாச்சாரம் ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம். நம் தாய் மொழி தமிழில் விவிலியத்தை வாசித்துக்கொண்டிருக்கிறோம். இத்தமிழ் விவிலியம் மூல மொழிகளின் மொழிபெயர்ப்பே.

மொழிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கே உரித்தான இலக்கிய, இலக்கண, மற்றும் உரைநடைப் பாணிகளைக் கொண்டவை. விவிலியம் எழுதப்பெற்ற மூல மொழிகளான எபிரேயமும், கிரேக்கமும் தொன்மை வாய்ந்த மொழிகளாகவும் வளமையான பாரம்பரியங்களையும் கொண்டுள்ளன. விவிலியத்தை ஆராய்ந்து கற்றுக்கொண்டிருப்போர், மூல மொழிகளை முறையாகக் கற்று, விவிலியத்தின் ஒவ்வொரு வார்த்தைகளின் வரலாறு, வாக்கியங்களின் இலக்கிய மற்றும் இலக்கண நடை ஆகியவற்றை ஆராய்ந்து விவிலியப் பகுதிகளின் பொருளைப் புரிந்துகொள்ள நமக்குத் துணைபுரிந்து கொண்டிருக்கின்றார்கள். இதைத்தான் ஆங்கிலத்தில் "Reading in between the Text" என்று அழைப்பார்கள்.

நம்மில் பலருக்கு மூலமொழிகளைக் கற்றுக்கொள்கின்ற வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், இறைவார்த்தையை ஆழமாகப் புரிந்துகொள்ள மொழி ஆய்வும் இன்றியமையாதது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்கின்றபொழுது, விவிலியக் கருத்துக்கள், மொழிபெயர்க்கப்படுகின்ற மொழியின் இலக்கண, இலக்கிய மற்றும் உரைநடைப் பாரம்பரியங்களில் பயணம் செய்து வருகின்றது. விவிலியக் கருத்துகள் இவ்வாறு பயணிக்கின்றபொழுது, மொழியின் இலக்கண, இலக்கிய மற்றும் உரைநடை பணிகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கவேண்டியிருக்கின்றது. எனவே, மூல மொழிகளில் பொதிந்திருக்கும் விவிலியப் பகுதிகளின் பொருள், மொழிபெயர்ப்பால் சாரம் இழந்துவிடுகின்றது. பல சூழல்களில் மாற்றுப் பொருளையும் தந்துகொண்டிருக்கின்றது.

எனவே நம் தமிழ் மொழிபெயர்ப்பு விவிலியத்தை வாசிக்கும்போதும், விளக்கம் தரும்போதும் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே விளக்கம் தருவதும் "எங்கள் தமிழ் மொழி பெயர்ப்பில் இந்த வார்த்தை இருக்கின்றது, எங்கள் மொழி பெயர்ப்பில் அந்த வார்த்தை இருக்கின்றது" என்று வாதிடுவதும் வீணான செயல் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## 4. நமது சூழலுக்கேற்ப புரிந்துகொள்ளுதல்.

நமது சூழலுக்கேற்ப புரிந்துகொள்கின்ற நிலையை ஆங்கிலத்தில் "Reading in front the Text" என்று அழைப்பார்கள். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், குறித்த மக்கள் சமுதாயத்திற்கு எழுதப்பட்ட விவிலியம், இன்று நாம் வாசிக்கையில் நம்முடைய வாழ்க்கைச் சூழலுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு அடிக்கோடிட்டுக் காட்டும் விழுமியங்கள் இக்காலத்திற்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளன. நமது கலாச்சாரம், பண்பாடு, சமூகச் சூழல் மற்றும் நமது தனிப்பட்ட வாழ்வில் எழும் சிக்கல்களோடு விவிலியத்தை வாசிக்கையில் அனைத்திற்கும் பதில் தருவதாய் விவிலியம் அமைந்துள்ளது.

எனவே விவிலியப் பகுதிகளுக்கு விளக்கம் தரும்பொழுது இக்காலச் சமூகச் சூழலையும் கருத்திற்கொண்டு விளக்கம் தரவேண்டும்.

## 5. முடிவுரை.

விவிலியத்தை மற்ற புத்தகங்கள், பத்திரிகைகள் போல வாசித்திட முடியாது. விவிலியத்தை வாசித்து அதன் பொருளைப் புரிந்துகொள்வதே ஒரு கலையாகும். மேலே கூறப்பட்ட படிமுறைகளின்படி வாசிக்கின்றபொழுது, விவிலியக் கருத்துகள் நம் இறை நம்பிக்கை வாழ்வுக்கு பெரிதும் துணைபுரிகின்றன. எனவே மக்கள் அனைவரும் விவிலியத்தை வாசித்து வாழ்வுபெறவேண்டும் என்பதற்காக தமிழகம், மற்றும் மறைமாவட்ட அளவில் பல்வேறு விவிலியக் கருத்தரங்குகள், விவிலியப் பயிற்சிப் பாசறைகள், விவிலிய அஞ்சல்வழிக் கல்வி, விளக்கவுரைப் புத்தகங்களை வெளியிடல் எனத் தாய்த் திருஅவையானது பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டால் விவிலியப் பகுதிகள் இன்று நமக்கு விடுக்கும் செய்திகளை நம் சூழலுக்கேற்பப் புரிந்துகொண்டு நம் ஆன்மீக வாழ்வில் வளமை பெறலாம்.

அருள்பணி. நி. வியாகப்பராஜ்
பாதைகாட்டும் விவிலிய விருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 01 -

| தை 2019 | | |
|---|---|---|
| தொடக்கநூல் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 1:1-2:4ய | 1:1-7 | 1:1-6 |
| 02) 2:4டி-24 | 1:18-25 | 2:1-12 |
| 03) 3:1-24 | 2:1-12 | 3:1-8 |
| 04) 4:1-25 | 2:13-15 | 4:1-8 |
| 05) 5:1-32 | 2:16-18 | 5:1-12 |
| 06) 6:1-22 | 2:1-23 | 6:1-10 |
| 07) 7:1-24 | 3:1-12 | 7:1-7 |
| 08) 8:1-22 | 3:13-17 | 8:1-9 |
| 09) 9:1-29 | 4:1-11 | 9:1-12 |
| 10) 10:1-32 | 4:12-17 | 9:13-20 |
| 11) 11:1-9 | 4:18-22 | 10:1-15 |
| 12) 11:10-32 | 4:23-25 | 10:16-18 |
| 13) 12:1-20 | 5:1-2 | 11:1-7 |
| 14) 13:1-18 | 5:3-12 | 12:1-8 |
| 15) 14:1-24 | 5:13-16 | 13:1-6 |
| 16) 15:1-21 | 5:17-20 | 14:1-7 |
| 17) 16:1-16 | 5:21-27 | 15:1-5 |
| 18) 17:1-27 | 5:27-32 | 16:1-11 |
| 19) 18:1-15 | 5:33-37 | 17:1-15 |
| 20) 18:16-33 | 5:38-42 | 18:1-15 |
| 21) 19:1-11 | 5:43-48 | 18:16-36 |
| 22) 19:12-22 | 6:1-4 | 18:37-50 |
| 23) 19:23-28 | 6:5-15 | 19:1-14 |
| 24) 20:1-18 | 6:16-18 | 20:1-9 |
| 25) 21:1-8 | 6:19-21 | 21:1-13 |
| 26) 21:9-21 | 6:22-23 | 22:1-18 |
| 27) 21:22-34 | 6:24 | 22:19-32 |
| 28) 22:1-19 | 6:25-34 | 23:1-6 |
| 29) 22:20-24 | 7:1-6 | 24:1-10 |
| 30) 23:1-20 | 7:7-11 | 25:1-15 |
| 31) 24:1-67 | 7:12 | 25:16-22 |

"வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்"
(யோவா 1:14)




| மாசி 2019 | | |
|---|---|---|
| தொடக்கநூல் | மத்தேயு | திருப்பாடல் |
| 01) 25:1-11 | 7:13-14 | 26:1-12 |
| 02) 25:12-26 | 7:15-20 | 27:1-6 |
| 03) 25:27-34 | 7:21-23 | 27:7-14 |
| 04) 26:1-25 | 7:24-28 | 28:1-9 |
| 05) 26:26-35 | 8:1-4 | 29:1-11 |
| 06) 27:1-29 | 8:5-13 | 30:1-12 |
| 07) 27:30-40 | 8:14-17 | 31:1-8 |
| 08) 27:41-28:9 | 8:18-22 | 31:9-18 |
| 09) 28:10-22 | 8:23-27 | 31:19-24 |
| 10) 28:1-30 | 8:28-34 | 32:1-11 |
| 11) 29:31-30:24 | 9:1-8 | 33:1-11 |
| 12) 30:25-43 | 9:9-13 | 34:1-10 |
| 13) 31:1-21 | 9:14-17 | 34:11-22 |
| 14) 31:22-42 | 9:18-26 | 35:1-16 |
| 15) 31:43-54 | 9:27-31 | 35:17-28 |
| 16) 31:55-32:20 | 9:32-34 | 36:1-12 |
| 17) 32:21-32 | 9:35-38 | 37:1-11 |
| 18) 33:1-20 | 10:1-4 | 37:12-29 |
| 19) 34:1-31 | 10:5-15 | 37:30-40 |
| 20) 35:1-15 | 10:16-25 | 38:1-22 |
| 21) 35:16-29 | 10:26-31 | 39:1-13 |
| 22) 36:1-19 | 10:32-33 | 40:1-10 |
| 23) 36:20-41 | 10:34-39 | 40:11-17 |
| 24) 37:1-11 | 10:40-42 | 41:1-13 |
| 25) 37:12-36 | 11:1 | 42:1-11 |
| 26) 38:1-30 | 11:2-19 | 43:1-5 |
| 27) 39:1-23 | 11:20-24 | 44:1-8 |
| 28) 40:1-23 | 11:25-27 | 44:9-26 |

"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது" (எபி 4:12)



# புனித ஜெரோம்

"விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்." மேற்கூறிய வார்த்தைகள் புகழ்பெற்ற திருவிவிலிய மொழிபெயர்ப்பாளர், திருச்சபையின் முதுபெரும் தந்தை, திருச்சபையின் விவிலிய அறிஞர், திருச்சபையின் விவிலியப் படிப்பிற்கு விண்ணகப் பாதுகாவலர் புனித எரோணிமுஸ் கூறியவை. இவர் யூகோஸ்லோவில் பிறந்து உரோமையில் கல்வி கற்றவர். 360-ஆம் ஆண்டு லிபேரியுஸ் என்ற திருத்தந்தையால் திருமுழுக்குப் பெற்ற இவர் குருப்பட்டம் பெற்று டாமசுஸ் என்ற திருத்தந்தையின் செயலாளராகப் பணியாற்றினார். திருத்தந்தையின் ஆணைப்படி திருவிவிலியத்தை இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்க பெத்லகேம் சென்று அங்கு தங்கி திருவிவிலியத்தை மொழிபெயர்த்தார். 420ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் காலமானார். அவரது திருநாள் செப்டம்பர் 30ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. திருவிவிலியத்தைப் பலர் கற்க ஒரு நல்ல விளக்கவுரை எழுதினார். திருவிவிலியத்தை வாசித்து இறைவார்த்தை பக்தியில் ஊன்றிய அவரின் தூய வார்த்தைகள்தான் "விவிலியத்தை அறியாதவன், கிறிஸ்துவை அறியாதவன்" என்பதாகும்.

புனித எரோணிமுசின் இவ்வார்த்தைகள் திருச்சபையின் சிறப்புமிக்க படிப்பினையாகப் போற்றப்பட்டு வருகின்றது. திருத்தந்தையர்கள் திருவிவிலியத்தைப் பற்றிய தம் சுற்று மடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இரண்டாம் வத்திக்கான் சங்கம் இறைவெளிப்பாடு என்ற கொள்கைத் திரட்டில் (எண் 25) விவிலியத்தை வாசிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் பொழுது, "விவிலியத்தை அடிக்கடி வாசிப்பதன் மூலம் 'கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம்' (பிலி 3:8) அதைப் பெற்றுக்கொள்ளும்படி கிறிஸ்துவ மக்கள் எல்லாரையும் சிறப்பாகத் துறவிகளையும் இச்சங்கம் மிகவும் தனிப்பட்ட முறையில் தூண்டுகிறது. விவிலியத்தை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியாமல் இருப்பதாகும்" என்று கூறுகின்றது.

"விவிலியத்தை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியாமல் இருப்பதாகும்" என்பதன் பொருள் என்ன? திருவிவிலியம் என்பது கடவுளின் வெளிப்பாடு. இது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு பிரிவிலும் பல நூல்கள் இருந்தாலும் இவை கூறும் ஒரு கருத்து: "மீட்பின் சரிதை", பாவம் செய்த மனிதனை மீட்க கடவுள் இடும் சட்டத்தையே திருவிவிலியம் கூறுகின்றது. புதிய ஏற்பாட்டில் மனிதனை பாவத்திலிருந்து மீட்க இயேசு இவ்வுலகில் பிறந்து, போதித்து, புதுமைகள் பல புரிந்து இறுதியாகத் தம்மையே சிலுவைச் சாவுக்குக் கையளித்தார். புதிய ஏற்பாட்டில் இயேசுவைப்பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நமது மீட்பு, நாம் இந்த இயேசு கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாகக் கிடைக்கின்றது. கிறிஸ்துவைப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவர்மீது நமக்குள்ள நம்பிக்கையையும் அன்பையும் வளர்ப்பதாகும். இது கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படை.

புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திகளிலும் கடவுள் தன்மை கொண்டிருந்த கிறிஸ்து எவ்வாறு மனிதனாகப் பிறந்தார் என்பதைப் பற்றியும், அவரது போதனை பற்றியும் கூறுகின்றன. அவற்றைத் தியானித்து நிதானமாக வாசிக்கும் பொழுது கிறிஸ்துவைப் பற்றிய ஆழ்ந்த அறிவு நம்மில் உருவாகும். புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்களைத் தவிர, திருமுகங்களும் உள்ளன. புனித பவுல் அடியார் எழுதிய திருமுகங்கள், பேதுரு, யோவான், யாக்கோபு எழுதிய திருமுகங்கள் கிறிஸ்துவைப் பற்றிய அறிவை, அந்த அறிவைப் பெற்றவர்கள் வாழ வேண்டிய முறைபற்றி அறிகிறோம். இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று, உணர்ந்து அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக (எபே 3:18-19) என்பது புனித பவுல் அடியாரின் போதனை. கிறிஸ்துவின் அன்பை அறிய ஒரு வழி புதிய ஏற்பாட்டை வாசிப்பதாகும்? அதனை அறிவதாகும். புனித எரோணிமுசின் கூற்று புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஏனெனில் நற்செய்தி நூல்கள் கிறிஸ்துவைப்பற்றிக் கூறுகின்றன. ஆனால் பழைய ஏற்பாடு எவ்வாறு கிறிஸ்துவைப்பற்றி அறிய உதவும் எனக் கேள்வி நம் மனதில் எழலாம்.

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் பிரிக்க முடியாத ஒரே நூல். பழைய ஏற்பாடு கடவுளின் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் காட்டி கிறிஸ்துவின் வருகைக்கு நம்மைத் தயார் செய்கிறது. பாவம் செய்த மனித குலத்தைத் (இஸ்ரயேல் மக்கள்) தேர்ந்தெடுத்து அவர்களோடு உடன்படிக்கை செய்கின்றார். இதனால் மீட்பின் வருகையும் அவர் கொண்டு வரும் மீட்பும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளவை புதிய ஏற்பாட்டில் நிறைவு காணுகின்றன. பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு வரியிலும் புதிய ஏற்பாட்டைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் சிறப்பான கருத்துகள், நிகழ்வுகள், போதனைகள் பழைய ஏற்பாட்டில் மறைமுகமாக, மங்கலாகக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக கிறிஸ்துவின் பிறப்புப்பற்றி எசாயா இறைவாக்கினர் நூலில் இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் (கன்னி) ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார், அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார் என்று தரப்பட்டுள்ளது. எசாயாவின் இவ்விறைவாக்கு கிறிஸ்துவின் பிறப்பால் நிறைவு பெற்றதைப் புனித மத்தேயு தம் நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு 'இம்மானுவேல்' எனப் பெயரிடுவர் என்ற இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன? என்று புனித மத்தேயு கூறுகின்றார். (மத் 1:22). இதே போன்று இயேசு பெத்லகேமில் பிறப்பார் என்பது மீக்கா இறைவாக்கினர் முன்னறிவித்ததே (மீக் 5:2). எசாயாவின் நூலில் துன்புறும் ஊழியன் பற்றிக் கூறப்படும் பாடல்களில் இயேசுவின் பாடுகள்பற்றி முன்கூட்டியே கூறப்பட்டுள்ளன (எசா 49, 53). திருப்பாடல்களும் இயேசுவின் பாடுகளைப் பற்றிக் கூறுகின்றன. (காண். திபா 22).

புதிய ஏற்பாட்டில் இடம்பெறும் சில நிகழ்வுகள் பழைய ஏற்பாட்டில் முன் அறிகுறிகளாகக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாகப் பாலை நிலத்தில் பாம்பால் கடியுண்ட இஸ்ரயேல் மக்களைச் சாவிலிருந்து விடுவிக்க மோசே வெண்கலத்தால் பாம்பு உருவம்செய்து உயர்த்தியது இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதின் முன் அறிகுறியாகும். (காண். யோ 3:14 எண் 2:19). மன்னா என்னும் அற்புத உணவு நற்கருணையையும் (யோவான் 6), யோனா மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்தது, இயேசு மூன்று நாள் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டதையும் (யோனா 1:29), பாஸ்கா திருவிழாவின் செம்மறி இயேசுவின் சிலுவைப் பலியையும் (யோவா 1:29), விடுதலைப் பயணம் திருமுழுக்கையும் (1கொரி 10:2) அறிவிக்கும் முன் அறிகுறிகளாகும். இவ்வாறு பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வாழ்வுக்கும் அவரது சொல்லுக்கும் செயலுக்கும் முன் அறிகுறிகள் உள்ளன.

ஆகவே, பழைய ஏற்பாடும் மறைமுகமாக கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட திரு விவிலியம் கிறிஸ்துவைப் பற்றி பல செய்திகளை நமக்கு அளிக்கின்றன. ஆகவே புனித எரோணிமுசு "திருவிவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" என்ற வார்த்தைகள் ஆழம் மிகுந்த பொருள் பொதிந்த வார்த்தைகள் என்பதை அறிய வருகிறோம்.

அருள்பணி. அ. அலோசியஸ் சேவியர்
பாதைகாட்டும் விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கின் வரலாறு - புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடா



எமது மறைமாவட்டத்தின் 125வது யூபிலி ஆண்டை சிறப்பித்துக் கொண்டிருக்கும் காலத்தில் இவ் இதழில் சீனக்குடா புனித அந்தோனியார் ஆலய அமைவிடம், ஆரம்ப கால மக்கள், ஆரம்பகால நிலை, தற்போதைய நிலை இவ்வாறான பல விடயங்கள் தொடர்பில் தெரிந்து கொண்டு அதனை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு ஆலயம் தொடர்பான விடயங்களை சேகரிக்க முனைகின்ற போதும் எதிர்பாராத உதவிகள், ஆதரவுகள், வரவேற்புக்களைப் பெற்றுக் கொண்டது வியப்பாக இருந்தது. திருமலைத்தீபம் மீதான மக்களின் ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க இது சற்றேனும் உதவும் என பெரிதும் நம்புகின்றேன், எனது எதிர்பார்ப்பும் அதுவே.

சீனக்குடா (Chinabay) எனும் பெயர் எப்படி வந்திருக்கும் என அநேகரைக் கேட்டேன். பலருடைய பதில் இதுவாக இருந்தது. சீனர்கள் இங்கு வசித்ததாகவும் தேயிலை பக்கட் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்து தேயிலை (TTA) பக்கட்டுக்களை கப்பல், ரயில் மூலம் ஏற்றமதி செய்துள்ளனர். முன்னர் சீனன்வாடி என அழைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலே ஏன் உலகத்திலேயே சீனக்குடா போன்றதொரு இடம் இருக்கும் என நான் நம்பவில்லை. இங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் நீங்கள் பயணிக்க விரும்பினால் நீங்கள் விரும்பிய போக்குவரத்து துறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். விமான நிலையம், கப்பல் துறைமுகம், ரயில் நிலையம், தரைவழி போக்குவரத்து என அனைத்து வழிகளையும் ஒரு குறுகிய நிலப்பரப்பினுள் கொண்டு காணப்படுகின்றது.

மேலும் இங்கு சீமெந்து தொழிற்சாலை, மா உற்பத்தி, பெற்றோலிய கூட்டுத்தாபனம், துறைமுக அதிகார சபை, பாரிய மீன்பிடி துறைமுகம், புழுடக மைதானத்துடன் போர்த்துக்கேய ஆங்கிலேய கால கட்டடங்களுடன் காணப்படுகின்ற விமானப்படை (Air Foce), கடற்படை (Navy) பராமரிப்பிலுள்ள ஹோட்டல்கள், பெரும்பாலான சுற்றுலாப்பயணிகளை கவர்கின்ற பளிங்குக்கடற்கரை (Marble Beach), இலங்கையில் கடலுக்கு குறுக்காக கட்டப்பட்ட மிகப்பெரிய பாலம் (கிண்ணியா 50M மேல்) ஆகியவற்றைக் கொண்டு தன்னை மிக அழகாக அழகுபடுத்திக் கொண்டு காணப்படுகின்றது. இதில் விசேடம் என்னவென்றால் இவை அனைத்தையும் 10 – 12Km பயண தூரத்திலேயே பார்வையிட முடியும் என்பதாகும்.

நான்கு மத வணக்கஸ்தலங்களையும் ஒரே பாதையில் ஒரே பக்கமாக 01Km இற்கும் குறைவான தூர பயண பாதையில் பிரதான வீதியின் ஓரத்திலேயே காணமுடியுமென்றால் அது இங்கு தான். இது இங்கு வாழுகின்ற மக்களுக்கும் பெருமை. அனைத்து இன மத மக்களும் நெருக்கமாக அருகருகே வாழுகின்றனர்.

1505ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயருடைய வழிமரபினர் இன்னும் இங்கு வசித்து வருகின்றனர். அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு குடும்பத்தினரைச் சந்திக்கச் சென்றேன். அந்தக் குடும்பத்தில் இரண்டு வயதுச் சிறுமி உட்பட அனைவரும் போர்த்துக்கேய பாசை பேசுகின்றனர். பார்ப்பதற்கு அழகாகவும் கேட்பதற்கு சுவாரஸ்யமாகவும் இருந்தது. போர்த்துக்கல்லில் இருந்து வருகை தந்தவர்கள் இங்குள்ளவர்களைச் சந்தித்துச் சென்றதுடன் தங்கள் நாட்டின் சொந்த மொழியினை அங்கு வழக்கொழிந்து போயுள்ள சிலவற்றை பதிவு செய்து எடுத்துச் சென்றுள்ளார்கள். அதற்கான சான்றுகளை பார்வையிட்டேன். விசேட நிகழ்வுகளில் "கப்ரிஞ்ஞா" எனும் பாரம்பரிய நடனம் தற்போது ஆடப்படுகின்றது. மரணச்சடங்குகள் அவர்களின் மொழியில் இடம்பெறுவதாக கூறினார்கள்.

இவ்வூரின் ஆரம்பகாலம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை தெரிந்து கொள்ள 1971ம் ஆண்டு இங்கு வருகை தந்து தற்போது வரை வசித்து வருகின்ற 78 வயது நிரம்பிய செபமாலை வள்ளிப்பிள்ளை அவர்களைச் சந்திக்கச் சென்றேன்.

பெரும்பாலான பாதைகள் ஒற்றையடிப் பாதைகளாகத்தான் இருந்தது. பொது இடங்களில் மாத்திரம் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். அனேகமான இடங்களில் இலந்தை மரங்கள் வளர்ந்திருந்தது. 1972ம் ஆண்டளவில் சீனக்குடா தமிழ் பாடசாலை சிலரது அயராத உழைப்பினால் உருவாக்கப்பட்டது. தற்போது அதன் நிலை கவலைக்குரியதாக உள்ளது அதன் பெயரைக்கூட மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறி கவலையடைந்தார்கள்.

சுற்றிவர புளியமரம் நடுவில் சிறு ஓலைக் கொட்டில் ஆலயம் தான் வரும்போதே காணப்பட்டதாகவும் எந்நேரமும் சிட்டி விளக்கு எரிந்து கொண்டிருந்ததாகவும் FR. டிக்கோணி சிறுவனாக இருந்தபோது மட்டக்களப்பில் இருந்து திருமலை நோக்கி புகையிரதத்தில் பயணிக்கும்போது கொட்டில் ஆலயத்தைக் கண்டு சிலுவை அடையாளம் இட்டதாக கூறியதாகவும் கூறினார்.

1977 வெள்ளப்பெருக்கு, 1983 இனக்கலவரங்கள் அதனைத் தொடர்ந்து யுத்த கால நிலைகளின் போதும் அனேகமான மக்கள் எமது ஆலயத்தில் தான் தஞ்சமடைந்தனர். ஏங்களுடைய மக்களின் பழக்க வழக்கங்களால் மற்ற மக்களும் எம்முடனும் ஆலயத்துடனும் இணைந்திருந்ததாகவும் இணைந்திருப்பதாகவும் கூறினார்.

1977ம் ஆண்டு Prima கட்டப்பட்டதினால் தொழிலின் நிமித்தம் அநேகமான மக்கள் இங்கு குடியேறி உள்ளனர். பெற்றோலியம் Coperation உலக மகா யுத்தத்திற்கு முன்னரே இருந்துள்ளது. யுத்தத்தின்போது ஜப்பானிய விமானங்கள் பெற்றோலிய கொள்கலன்களின் மீது குண்டுகளைப் போட்டுள்ளன.

சீனக்குடாவில் ஓர் ஆச்சிரமம் இருந்ததாக தெரிந்து கொண்டு அது தொடர்பாக அறிந்து கொள்ள தற்போது மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் ஆச்சிரமத்தில் பணியாற்றும் அருட்சகோதரி எலா அவர்களைச் சந்திக்கச் சென்றேன்.

ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், விதவைகள், சிறுவர்கள் இவர்களுக்கு பணிசெய்வது தான் அருட்தந்தை மரியநாயகம் அவர்களின் குறிக்கோளாக இருந்தது. இவரால் தான் வெள்ளை மணல் பரிசுத்த ஆவியானவர் ஆலயம் அமைக்கப்பட்டது. குறிப்பாக மலைநாட்டிலிருந்து பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் தான் சீனக்குடாவிலும் கப்பல் துறையிலும் அருட்தந்தையின் பராமரிப்பில் தங்கி வாழ்ந்தார்கள். இவர்களின் தேவைகளுக்காக பல தொழில் வாய்ப்புக்களை ஆரம்பித்தார். 1974ம் ஆண்டு சீனக்குடா ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டது,

தம்பலகமப் பிரதேசத்தில் வேளாண்மை, மரக்கறித்தோட்டம், கப்பல்துறை பிரதேசத்தில் செங்கல் வாடி, மரக்கறித்தோட்டம், சீனக்குடா பிரதேசத்தில் பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு மாடு வளர்ப்பு, பற்றிக் சென்டர் (ஆடைகளுக்கு சாயம் போடுதல்) துவரங்காடு பிரதேசத்தில் விவசாயம் போன்றன ஆரம்பிக்கப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக கூறிய போது ஆச்சரியமாக இருந்தது.

மேலதிக விபரங்களுக்காகவும் பங்கின் தற்போதைய நிலை தொடர்பிலும் தெரிந்து கொள்ள பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க அவர்களை சந்தித்தேன். Royal Air Force, ஆன்மீக தேவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. 1930ம் ஆண்டிலிருந்து பேராலயத்தில் இருந்து பார்க்கப்பட்டுள்ளது. 1946 -1948 இற்கு இடைப்பட்ட காலத்தில் 2ம் உலக மகா யுத்தத்திற்கு பிறகு மக்களிடம் கையளிக்கப்பட்டது. தற்போது கூட Air Forceஇனால் தேவையான உதவிகள் செய்யப்படுவதுடன் அன்று தொடக்கம் பங்குத்தந்தைக்கு மூன்று வேளைக்குமான உணவு வழங்கப்படுகின்றது. பங்கில் அனேகமான குடும்பங்கள் சகோதர மொழி பேசுகின்ற கத்தோலிக்கர்களாகக் காணப்படுகின்றனர். இரு மொழிகளிலும் ஒரு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகின்றது.

துணைப்பங்குகளாக தற்போது வெள்ளைமணல் பரிசுத்த ஆவியானவர் ஆலயமும் நாச்சிக்குடா கல்வாரித் திருத்தலமும் காணப்படுகின்றது. கிண்ணியாவில் கிறிஸ்து அரசர் ஆலயம் இருந்தது. 2005ம் ஆண்டு சுனாமிக்குப் பிறகு குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றனர். 2013ம் ஆண்டு அக்காணி விற்பனை செய்யப்பட்டு விட்டது. தூரநோக்கு இல்லாமலும் மக்களின் ஆன்மீக தேவைகளை கருத்தில் கொள்ளாமலும் செய்த இச்செயலானது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. பிற இனத்தவர்களால் எங்கு வேண்டுமானாலும் வசிக்கலாம், வணக்கஸ்தலங்களை உருவாக்கலாம் என்றால் எம்மால் ஏன் முடியாது என்றும் கேள்வி எழுப்பினார். ஆலயம் அமைக்காவிட்டாலும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டு எம்முடைய பாரம்பரிய ஆரம்ப கால வரலாற்றை பாதுகாத்திருக்கலாம்.







தொடர்ச்சி 09ம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ௦8ம் பக்க தொடர்ச்சி........ பங்கின் வரலாறு........

கிண்ணியா பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக இந்து ஆலய காணி ஒன்று தற்போதும் உள்ளது. இந்து மக்கள் எவரும் அங்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிண்ணியாவில் வசித்து வருகின்ற மூன்று குடும்பங்களை சென்று சந்தித்தேன். மிக மன வேதனையாக இருந்தது. எங்களுடைய ஆலய காணியினை விற்பனை செய்து விட்டார்கள். இதனால் அடைந்த பயன் என்ன? அருட்தந்தை சொய்சா காலத்தில் மூதூரில் இருந்து கல்வாரி நோக்கி வருகின்ற மக்கள் எமது ஆலயத்தில் தங்கி செல்வார்கள். தற்போது நாங்கள் வெள்ளைமணல் ஆலயத்திற்கு புதன், ஞாயிறு கிழமைகளில் 50/- செலவு செய்து திருப்பலிக்கு சென்று வருகின்றோம் என்று கூறினார்கள்.

1992 -1993 காலப்பகுதியில் சங்கம மீள்குடியேற்றப் பகுதியில் நான்கு மதங்களுக்கும் வணக்கஸ்தலங்களை அமைத்துக் கொள்ள காணிகள் வழங்கப்பட்டது. எமக்கு வழங்கப்பட்ட காணியினை உரிய முறையில் பராமரிக்காமையினால் அது தற்போது எம்முடையதாக இல்லை. வேறொரு சிறிய காணியினை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் வெற்றியளிக்கவில்லை.

அருட்தந்தை ஜோசப் மேரியினால் (இ. ச )உருவாக்கப்பட்ட சிலுவைமலை (கல்வாரித் திருத்தலம்) பற்றி தெரியாத வரலாறு ஒன்று உள்ளது. 2ம் உலக மகா யுத்தம் (1943 - 1945) இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் சிலுவைமலைக்கு மேலாக பறந்த யுத்த விமானம் ஒன்று (Harbour யுத்தம்) மலையில் மோதி விபத்து ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது. அதில் பயணித்த கத்தோலிக்க விமானி பின்னர் மலையில் சிலுவை ஒன்றை நட்டு வைத்தார். இது தொடர்பான ஆவணங்கள் Air Force குறிப்புக்களில் உள்ளதாக அதிகாரி ஒருவர் தன்னிடம் இது காலப்போக்கில் சிலுவைமலை உருவாவதற்கு அடித்தளமாக இருந்திருக்கக் கூடும். பங்கு கல்வி செயற்பாடுகளாக கணனி வகுப்புக்கள், தையல் பயிற்சி வகுப்புக்கள், பாலர் பாடசாலையும் ஏனைய ஆன்மீக செயற்பாடுகளும் விசேட நிகழ்வுகளாக ஆலய பெருவிழா, மறைமாவட்ட கல்வாரி திருத்தல நிகழ்வுகளும் இடம்பெறுகின்றது.




பங்கில் இருந்து உருவான அருட்சகோதரி ஜெனிட்டா றாகல் அவர்களும் எமர்சன் றாகல், யூட் ஆகியோர் கண்டி தேசிய குருமடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர். அருட்பணி சுதர்சன் அவர்களின் குடும்பத்தினர் தொழிலின் நிமித்தம் சீனக்குடாவில் இருந்தபோது அவர் குருமடத்திற்குச் சென்று குருவானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


அருட்பணி சுதர்சன்


அருட்சகோதரி ஜெனிட்டா றாகல்


அருட்சகோதரர். எமர்சன் றாகல்


அருட்சகோதரர்.யூட்

ஆலய வளாகம் மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் சுற்றுப்புறங்களில் அழகான காட்சிகள் அமைக்கப்பட்டுக் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளைக் காணக்கூடியதாகவும் இருந்தது. சீனக்குடா பங்கு மேலும் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இந்த ஆக்கத்தினை உருவாக்க உதவிய அனைவருக்கும் குறிப்பாக பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க, அன்டன் போல், திரு பீற்றர் திலீப்குமார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**ஆக்கம்: திரு. நா. சுரேஸ்**
**திரிகூடம்,**
**மூதூர்.**

# கிறிஸ்மஸ் பண்டிகையின் வரலாறு

கிறிஸ்மஸ் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்தவ நண்பர்களின் வீட்டிற்குச் சென்றால் கேக் தடபுடல் விருந்துதான். ஆனால் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் தொடங்கிய பின்னணியும், அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது.

இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம் தான் கிறிஸ்மஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால் இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்மஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது.

கிறிஸ்மஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற இரண்டு வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால் கி. மு 7இற்கும் கி. மு 2இற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

அதுபோலவே யூதர்களின் பருவகாலம், நாட்காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4வது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்தேய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து, ஜனவரி 6ம் தேதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.

எப்படி இருப்பினும் கிறிஸ்மஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்தவர்கள் விஷேசமாகக் கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

கி. பி. 800ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை அன்று சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன்பிறகு கி.பி. 855ம் ஆண்டு இட்முன்ட் என்ற தியாகி மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் இரு கிறிஸ்மஸ் பண்டிகையை வெகு விமர்சையாக கொண்டாடினார். 1643ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்மஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது.

இப்படி கிறிஸ்மஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து பின்னர் உலகமெங்கும் விமர்சையாகக் கொண்டாடும் வழக்கம் உருவானது. கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதும் போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. கிறிஸ்மஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம் 1510ம் ஆண்டு ரிகா எனும் இடத்தில் தொடங்கியது.

1863ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ம் ஆண்டு இங்கிலாந்தில் முதன்முறையாக வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் தொடங்கியது. கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் குழுக்களாக சேர்ந்து கரோல் பாடல்கள் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இந்த நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும், அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துக்களை கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம்.

மொத்தத்தில் நல்லது ஓங்கவும் தீமை அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் ஒருங்கிணைந்து கொண்டாடி மகிழ்கின்றனர்.

**நன்றி - இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்
# திருவிவிலிய புதிர் போட்டி எண் - 36
# 2 குறிப்பேடு 25 -36 அதிகாரங்களின் விடைகள்

பங்குபற்றியவர்கள் : 29 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் : 11 பேர்

01. ஒதேது (28:09)
02. புளியாத அப்பத்தை, ஏழு (30:21)
03. கைத்தாளம், தம்புரு, சுரமண்டலம் (29: 25,27)
04. தன் அரண்மனையிலேயே (33:20)
05. திருச்சட்ட நூலைக் (34:15)
06. பாபிலோன் அதிகாரிகளிடமிருந்து. தூதர்கள் (32:31)
07. நல்லவராகவும், நேர்மையுடையவராகவும், உண்மையுடையவராகவும் (31:20)
08. 25 வயது, 29 ஆண்டுகள் (25:01)
09. 70 ஆண்டுகள் (36:21)
10. ஒரு தொழுநோயாளியாக (26:21)
11. செம்மறி ஆண்டுக்குட்டிகளும், வெள்ளாட்டுக்குட்டிகளுமாக மொத்தம் 30,000 காளைகள் - 3,000 (35:7)
12. 4,000 கி.கி வெள்ளியும் 10,000 கலம் கோதுமையும், வாற்கோதுமையும் ( 27:05)

## பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500 /- ரூபா**
வி. சொய்ஸ் கிளின்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

**2ம் பரிசு 300 /- ரூபா**
சு. கௌசல்யா
இல : 126/12,
சுடரொளி ஒழுங்கை,
பாலையூற்று

**3ம் பரிசு 200 /- ரூபா**
அ. கரோளினி கிறீப்திக்கா
இல : 57, தபால் நிலைய வீதி,
திருகோணமலை

## பாராட்டுக்குரியவர்கள்

01. இ. திலுச்சிக்கா - பாலையூற்று
02. தேனுகி கிரிதரன் - பேராலயம்
03. கிறிஸ்டி ஜெனிக்ஷயா - இலிங்கநகர்
04. டெலிஷா நெவில்ராஜ் - குவாடலூப்பே
05. எப். ஆர். எப். ரொஹித் - குவாடலூப்பே
06. கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்
07. பி. பெலிசியன் சேவியர் - பாலையூற்று
08. சு. சுவேக்கா - பாலையூற்று

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள் ஞானப்பெற்றோர்

பங்கு பற்றியவர்கள் : 15 பேர்

## பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500 /- ரூபா**
டெனின் வியான் ஜொயல்
இல: 690, பாரதிபுரம்,
கன்னியாவீதி,
அன்புவழிபுரம்

**2ம் பரிசு 300 /- ரூபா**
கி. ஜெனிக்ஷயா
இல : 8/33, இலிங்கநகர்,
திருகோணமலை

**3ம் பரிசு 200 /- ரூபா**
மு. ரக்சாயினி
மாங்காயூற்று,
கன்னியா

பங்குபற்றிய அனைவருக்கும்
பாராட்டுக்களும் நன்றியும்

# நமக்குள் இயேசு பிறக்கவே..........

அருட்பணி. N.C. அருள்வரதன்



உள்ளத்தின் தூய்மையதை
உயர்வாகக் கொண்டு நாங்கள்
எங்களை மாற்றும் போது
நம் வாழ்வில் இயேசு பிறப்பாரே

பகைமைகள் வெறுப்புக்கள்
பழி உணர்வுகளை நீக்கிவிட்டு
அன்புறவு தவம் மனநிலைகள்
நமக்குள் வளர்ந்துவர
நமக்குள் இயேசுவின் பிறப்பிடம்
உருவாவது உண்மையே

வேற்றுமைகள் வேறுபாடுகள்
வேண்டாமே நம் வாழ்விலே
ஏற்போம் எல்லோரையும்
எம் அன்பு உறவுகளாய்
ஏற்கும் மனஉணர்வை
நமக்குள்ளே வளர்க்கும்போது
நமக்குள் இயேசு பிறப்பதுண்மையே

வறுமை ஏழ்மை
பொறுமை அன்புறவுக்கு
வழிகாட்டினார் நம் இயேசு
நாமம் அவரின் வழிகளை ஏற்று
வாழும்போது நமக்குள்ளே
இயேசு பிறக்கின்றார் மகிழ்வோமே

# "கிறிஸ்மஸ்" சிறப்புப் போட்டி

அருட்பணி. N.C. அருள்வரதன்

**இதோ கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

## இயேசுவின் பிறப்பு

**இதோ கவிதை வரிகள் ...........**

- மண்ணிலே தருகின்றார் மகிழ்வுடனே
- மாமரியாள் தன் மகனை
- ஞானிகளும் வந்து போக
- வானுயர்ந்து நிற்கவே
- வாழ்த்தொலியின் கீதங்களும்
- வானவரின் கீதங்களும்
- மாபரனார் பிறக்கின்றாரே
- மாடடையும் குடிசையிலே
- காலத்தை வெளிக்காட்டவே

சரியாக வடிவமையுங்கள்
எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 30.01.2019

# சிறுவர்களுக்கான *நிறம் தீட்டுதல் போட்டி*

## கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்

- **பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.**
- **திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
- **1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**

**1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=**




பெயர் ..........................
முகவரி ..........................
பங்கு ..........................
தரம் ..........................
முடிவுத் திகதி 30.01.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி 2018

❖2018ம் ஆண்டு எமது மறைமாவட்டத்தின் கருப்பொருள்களை மையப்படுத்தி பின்வரும் வினாக்கள் அமைந்துள்ளன. தை - கார்த்திகை வரை வெளிவந்த "திருமலைத்தீபம்" பத்திரிகையை பார்வையிட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

❖சரியான விடை எழுதுபவர்களில் இருந்து குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

எல்லாரும் பங்குபற்றலாம்.

திருமலைத்தீபத்தில் தரப்பட்ட வினாக்கொத்தில் விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1ம் பரிசு : ரூபா 1000 /-
2ம் பரிசு : ரூபா 750 /-
3ம் பரிசு : ரூபா 500 /-

01. எமது மறைமாவட்டத்தின் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்த 2018ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று கருப்பொருள்களும் எவை?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

02. புனித மாற்குவின் விழாவை கத்தோலிக்க நாட்காட்டி எப்பொது நினைவு கூருகிறது?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

03. புனித மாற்கு தனது நற்செய்தியை 'பாடுகளின் பாதை' எனக்குறிப்பிடுவதன் காரணம் யாது?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

04. அன்பியத்தின் 07 படிநிலைகளின் நோக்கம் யாது?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

05 .அன்பியம் பற்றிக்கூறும் திருவிவிலியப் புத்தகம் யாது?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

06. ஞானப்பெற்றோரின் முக்கியமான கடமை என்ன?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

07. புனித மத்தேயுவும். புனித லூக்காவும் எந்த நற்செய்தியை மூலமாகக் கொண்டு தமது நற்செய்தியைப் புனைந்துள்ளனர்?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

08. புனித மாற்கு தனது நற்செய்தியில் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளை மேற்கோள் காட்டியுள்ளார். அதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடும் இரண்டு நூல்களையும் குறிப்பிடுக?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

09. ஞானப்பெற்றோரை நாம் தெரிந்தெடுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் இரண்டைத் தருக?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

10. "இயேசு தம்மைப்பற்றிய பெருமைக்குரிய உண்மைகளைத் தடை செய்தார்" என மாற்கு நற்செய்தி கூறுவதன் தெளிவான விளக்கத்தை தந்த ஜெர்மனிய ஆய்வாளரின் பெயர் என்ன?

..............................................................................................
..............................................................................................
..............................................................................................

பெயர் :..............................................................................

முகவரி :..............................................................................

பங்கு :..............................................................................

முடிவுத்திகதி: 30.01.2019

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 30
## கலாத்தியர் அதி 01 - 06 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | று | வ | டை | செ | ய் | வோ | ம் | | கு |
| | | | ஏ | மா | ந் | து | | கு | று |
| | ப | ணி | யா | ள | னா | ய் | நா | டி | கி |
| டு | அ | ரு | ளி | னா | ர் | | ழி | ம | ய |
| பா | | ம் | று | பெ | சி | ஆ | கை | க் | கா |
| து | அ | ரு | ள் | ப | ணி | | யே | க | ல |
| ந் | | அ | டி | மை | | | னு | ள் | த் |
| ழ் | ள் | க | பு | ம் | ழு | த | ம் | | தி |
| கி | ஒ | ன் | று | க் | கொ | ன் | று | | ல் |
| ம | ல் | றி | ற் | யி | வ | ன் | யி | தா | |

01. குறுகிய காலத்தில்
02. நாழிகையேனும்
03. தாயின் வயிற்றில்
04. மகிழ்ந்து பாடு
05. அருளினார்
06. அடிமை
07. தழும்புகள்
08. பணியாளனாய்
09. அறுவடை செய்வோம்
10. குடிமக்கள்
11. ஆசிபெறும்
12. அருள்பணி
13. ஏமாந்து
14. ஒன்றுக்கொன்று




போட்டியில் கலந்து கொண்டோர் - 55 பேர்
சரியான விடையளித்தோர் - 35 பேர்

## பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
லீ. சா. பியூரா
156/32, டொக்கியாட் வீதி,
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
து. காமல் கலாவதி.
பீலியடி, புதிய வீட்டுத்திட்டம்
கன்னியா



**3ம் பரிசு 200/=**
வ. றிச்சட் மாக்கஸ்
இல 529/31, ஏகாம்பரம் வீதி,
கேணியடி, குவாடலூப்பே

## பாராட்டுக்குரியவர்கள்

01. சு. கௌசல்யா - பாலையூற்று
02. ஜி. செபானா - கன்னியா
03. கோகுல் அபிஷா - கும்புறுப்பிட்டி
04. T. யோன்சன் - பேராலயம்
05. மை. யுவான் ஜெரமி - உவர்மலை
06. S. ஆரோன் - குவாடலூப்பே
07. S. கயானி - அன்புவழிபுரம்
08. டெலிஷா நெவில்ராஜ் - குவாடலூப்பே
09. S. டிலூஷிகா - கன்னியா
10. M. றோஸ்மலர் - கன்னியா
11. S. நிவேதிகா - கன்னியா
12. T. நான்சி -செல்வநாயகபுரம்
13. வெ. பெனடிக்ஷன் - கும்புறுப்பிட்டி
14. T. C. ஜெலஸ்டின் - மூதூர்
15. லொறன்சி ஜொனத்தன் - சாம்பல்தீவு
16. P. கொன்சலா டினீஸியா - உவர்மலை
17. R. எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
18, செ. தனுஷிஹா - கன்னியா
19. T. பற்றிமா - பாலையூற்று
20. T. ஆன் பிறசில்டா - இலிங்கநகர்
21. J. டெய்சி ராணி - கன்னியா
22. ம. டெவோன்ஷா - பாலையூற்று
23. நிரோஷன் நிரோன் - சாம்பல்தீவு
24. ரிச்சட் ஷாதேஸ் - குவாடலூப்பே
25. எஸ். கன்சிக்கா - நிலாவெளி
26. A. K. தர்ஷகாமேரி - பேராலயம்
27. எ. றபிந் வெரோனியஸ் - நிலாவெளி
28. T. தனராஜா - அன்புவழிபுரம்
29. கு. புஸ்பம் - பாலையூற்று
30. எ. எமில்ரன் - பள்ளத்தோட்டம்
31. தே. சமில்டன் - நிலாவெளி
32. சு. சுவேக்கா - பாலையூற்று

# குட்டிக்கதை ஒன்று....... Fr. NC

அந்தக் கிராமத்திலே வாழ்ந்தவர்களுள் இருவர் ஒருவர் ஒருவரோடு பேசுவதில்லை. அதிலே ஒருவரின் முகத்திலே காயத்தழும்பு. அது மற்றவர் இவருக்கு அடித்ததால் ஏற்பட்ட காயத்தழும்பு. இப்போது என்னவென்றால் இருவரும் ஒன்றிணையும் ஒரு நல்ல நிலை உருவானது. பகைமை மறையப் போகிறது.

இருந்தாலும் அடிபட்டவரின் மனதிலே இப்படி ஒரு நினைவு. அடிக்கும் போது அவர் சொன்ன வார்த்தைகள் மிகவும் கொடுமையானது.

உறவைப் புதுப்பிக்க எந்தத் தடையுமே இல்லை. ஆனால் மனதை வருத்துவது இதுதான் "தீயினால் சுட்டபுண் மாறும் மாறாது நாவினால் சுட்ட வடு"
இது உண்மை தானே!

# Silent Night

200வது வருட நிறைவைக் கொண்டாடுகின்றது.
இப்பாடலை எழுதியவர்: Fr. ஜோசப் மோர்
இசையமைத்தவர் : பிரான்ஸ் சேவியர் குறூபர்
இப்பாடல் "Stille Nacht" என்ற ஜேர்மன் மொழியிலிருந்து "Silent Night" எனும் ஆங்கில [illegible]

இப்பாடல் 300 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
190வது நினைவு விழாக் கொண்டாட்டம் 2008ல் கொண்டாடிய போது ஐரோப்பிய நாடுகளிலிருந்து 10,000 மக்கள் இத்திருப்பலியில் கலந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு **06.02.1977**

உதிர்வு **07.12.2017**

## பரராஜசிங்கம் போல் பிரகாஷ்

**"இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததை கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்"**
தி.ப 1 : 11

இல்லறம் செழிக்க இடைவிடாது உழைத்த உத்தமர்........
வளர்பிறையாய் எம் குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்ந்துபோன தியாகச்சுடர்.....
எங்கள் உணர்வோடு கலந்த உறவு!
இன்றுவரை உங்கள் பிரிவின்
நினைவால் வாழ்கின்றோம்
அதனால் உணர்வின் வலியை
எங்கள் நினைவின் அஞ்சலியாக....!
அப்பா........
"நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்
முடிவில்லாத ஒளி இவர்மேல் பிரகாசிக்க கடவது"

**தகவல் - குடும்பத்தினர், உவர்மலை, திருகோணமலை.**

# விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி



| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 16 | 27 |
| 04 | 12 |
| 1959 | 2017 |

## திருமதி. பெற்றிக் ஆரோக்கியம்

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா. 116:15)

முயன்றேன் நான் உன்னை மறக்க
ஆனால் அழியவில்லை உன்
அழகிய முகம் என் சிந்தையில் இருந்து..

இவ் உலகில் நான் அதிகம்
முத்தமிட்ட பெண்ணும் நீயே!
இன்று அதிகம் நான் ஜெபிக்கும்
புனிதையும் நீயே!

வாழ்வும் சாவும் ஜதார்த்தம்
என்று உரைப்பது சுலபம் அம்மா!
ஆனால் அந்த ஜதார்த்தத்தை
அனுபவிப்பது கடினம் அம்மா!



இறைவன் மட்டுமே அறிவார்
ஏன் உன்னை தன்னிடம்
அழைத்தார் என்று, இன்று
உன் நினைவில் வாழ்வோம்
மீண்டும் உன்னை சந்திக்கும் வரை

**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**

# புனித மரியாள் பேராலயத்தின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின்

## தேசிய இளைஞர் ஞாயிறு தின சிறப்பு திருப்பலி



திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் தமது தேசிய இளைஞர் ஞாயிறு திருப்பலியை 28.10.2018 அன்று இளைஞர் ஒன்றிய உறுப்பினர் பங்கில் சிறப்பித்தனர்.

# க.பொ. த. (சா.த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு





புனித மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டிலும் பங்குத்தந்தை அருட்பணி போல் றொபின்சன் அவர்களின் வழிகாட்டலிலும் 04.11.2018 அன்று ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை புனித மரியாள் பேராலய கலாச்சார மண்டபத்தில் ஆசிரியை திருமதி. யாஷினி ஜோன்பிள்ளை அவர்களின் தலைமையில் விஞ்ஞான பாட கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அனைத்து பங்கிலிருந்தும் 45 மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர்.

**இளைஞர் ஒன்றியம், பேராலயம்**

# உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட பணியாளர்களுக்கான கருத்தரங்கு



திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனம், கரித்தாஸ் தேசிய நிலையத்துடன் இணைந்து வடக்கு மற்றும் கிழக்கு மறைமாவட்டத்தில் உள்ள உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கான இரண்டு நாள் கருத்தமர்வானது தீபம் நிலையத்தில் 2018.09.27ம்,28ம் திகதிகளில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் அவர்களும், கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அவர்களும் கலந்து சிறப்பிப்பதோடு இப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார மருத்துவ மாது, மற்றும் விவசாய திணைக்களத்தின் போதனா ஆசிரியர்கள், கலந்து சிறப்பித்தார்கள்.

# கரித்தாஸ் நோர்வே பிரதிநிதியின் முதல் வருகை





வறுமைக்கான காரணத்தை அறிந்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் எனும் நிகழ்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தும் முகமாக கரித்தாஸ் நோர்வேயின் பிரதிநிதியான திரு. ஆரோன் ஹல்பன் அவர்கள் 20.10.2018 அன்று திருகோணமலைக்கு வருகைதந்து, களத்தரிசிப்புக்காக சம்பூர் பயணமானார். இத்திட்டத்தின் மூலம் இரண்டாயிரம்(2000) பயனாளிகள் ஒரு வருடத்திற்குள் பயன்பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : எகெட் கரித்தாஸ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அனைத்து உயிர்களே ஆண்டவரைப் புகழ்ந்திடுக (தி. பா 150: 6)**